DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan Broker
Homelife/Future Reality Inc., Brokerage
Joy H. Selvanayagam Broker

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX Realty Inc. Brokerage
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

25வது ஆண்டை நோக்கி
Towards 25th Year in Publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
$1.00
Tel : 416-752-1524
Fax: 416-752-6703
உதயம் 1276 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 18, 2020

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

KANAGAAMBIKAI PAWN BROKERS
கனகாம்பிகை தங்கநகை அடகுமாடம்
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurence;
Citizenship;
Permanent resident card renewal;
Affidavits for Immigration purposes;
Kokulan Baskaran
Tel : 647-344-6600

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com

# இலங்கை அரசாங்கத்தால் காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்காக நீண்ட நடையை மேற்கொண்ட ஏழு நடைப் போராளிகள் ஒட்டாவா மாநகரில் மகஜரைக் கையளித்தனர்





இலங்கை அரசாங்கத்தால் காணாமலாக்கப்பட்ட எமது உறவுகளுக்காக பிரம்டன் மாநகரிலிருந்தும் மொன்றியால் மாநகரிலிருந்நதும் நீண்ட நடையை இரண்டு பிரிவுகளாக மேற்கொண்ட ஏழு நடைப்போராளிகள் ஒட்டாவா மாநகரில் கடந்த 14ம் திகதி திங்கட்கிழமையன்று நீண்ட மகஜரை ஒன்றை கனடிய அரசின் பிரதிநிதியிடம் கையளித்தனர். அத்துடன் அதன் பிரதிகள் எமது பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி மற்றும் கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் பிரதிநிதி ஆகியோரிடம் கையளிக்கப்பட்டன.

ஒட்டாவா கால்றன் பல்கலைக் கழகத்திற்கு முன்பாக மதியம் 11.00 அளவில் பாராளுமன்ற வளாகத்தை நோக்கி இறுதிநாள் நடைப்பயணத்தை மேற்கொண்ட மேற்படி ஏழு நடைப்போராளிகளோடு பொதுமக்களும் சேர்ந்து நடந்தனர்.

ஒட்டாவா பாராளுமன்றத்திற்கு முன்பாக கூடிய ஆயிரத்திற்கும் அதிகமான எமது உறவுகள் கோசங்களை எழுப்பியும் கொடிகளை ஏந்தி நின்று நடைப் போராளிகளுக்கு செங்கம்பள வரவேற்பளித்தனர்.

கடந்த ஆகஸ்ட் 30ம் திகதி திருவாளர்கள் டேவிற் தோமஸ், யோகேந்திரன், மகாஜெயம், விஜிதரன் ஆகிய நான்கு நடைப்போராளிள், ஒன்றாரியோவின் பிரம்டன் மாநகரத்தின் நகரசபை கட்டடம் அமைந்துள்ள வளாகத்திலிருந்தும், மற்றும் திருவாளர்கள் யோகேஸ்வரன், குலேந்திர சிகாமணி, விஜயகுமார் ஆகிய மூன்று நடைப்போராளிகள், கடந்த செப்படம் 6ம் திகதி, மொன்றியால் மாநகரத்திலிருந்தும் தங்கள் நெடும் நடையை ஆரம்பித்தனர் என்பது உலகெங்கும் வாழும் அனைத்து தமிழ் மக்களும் நன்கு அறிந்த செய்தியாக எழுச்சி பெற்றது.

இலங்கை அரசினாலும் இலங்கை இராணுவத்தினாலும் காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளை மீளவும் பெற்றுத்தரவேண்டிய பொறுப்பு அல்லது அவர்களின் தற்போதைய நிலைபற்றிய விபரங்களை உலகத்திற்கு அறியத்தரவேண்டிய பொறுப்பும் இலங்கை அரசாங்கத்திற்கே உள்ளது என்பது போன்ற பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன என்பது இங்கு சொல்லப்பட வேண்டிய விடயமாகும்.



இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பட்டவையாகும்.
(படங்கள்: செய்தி.கொம்- குணா)

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line Visit
(416) 489-2000 GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7 905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905 794 4404

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
✓ Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

உங்கள் இல்லங்கள் அல்லது பண்ணை வீடுகள் ஆகியவற்றில் அழகிய முறையில் திருத்த வேலைகளைச் செய்து கொள்ள எம்மை அழையுங்கள்
Interior: Staircase Refinishing/Installation - Flooring Refinishing /Installation
Bathroom/Kitchen/Basement Renovations Additions & Extensions
Exterior : Fence/Interlock/Deck.
ZY RENOVATION
ZY-Renovation Call: Ethan @ 647 995 5955

# MORTGAGE SOLUTIONS

## $50,000 EQUITY LOAN

GET APPROVED WITHIN 24 HOURS

416.298.2777

$375 Mo.

www.mortgageSolutions.ca

MONTHLY SAVING

$2,478

SAVE UPTO 75% REFINANCE



KIRUBA THANABALASINGHAM

Mortgage Agent Lic# M12002440

Ultimate Mortgage Group Lic 11995

info@mortgageSolutions.ca

Off: 416.298.2777

Dir: 416.894.9122

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credt Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.39% | | $1,563.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,563.00 |

# MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Suganthy, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## GHURUS TOWING

Forklift / Machinery move
Local / Long Distance Towing
Recovery Specialist
Flatbed Service
Lockout Specialist
Booster service
Flat Tire

We pay scrap up to $1000



NIRMALAN (ROGER):
(416) 990-7777
(416) 984-7777

## COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

VARUNAN:
(416) 894-6244

## வீடு வாடகைக்கு உண்டு

Bellamy / Eglinton
சந்திப்பிற்கும் அருகில்
3 அறைகளுடன் கூடிய வீடு
வாடகைக்கு உண்டு.
Close to TTC, GO Train, & all facilities.
Available from November 1st, 2020.
Rent: $2,100

Call: (416) 671-0085
(647) 960-6427

## BASEMENT வாடகைக்கு உண்டு

அனைத்து வசதிகளுடன்
Markham / Denison
சந்திப்பிற்கும் Amazon நிறுவனத்திற்கும் மிக அருகில் 3 அறைகளுடன் கூடிய basement வாடகைக்கு உண்டு

Call:
(647) 703-3254

## JOBS AVAILABLE

Jobs Available
in the GTA immediately.

Postitions Available:
- General Labour / Assembler
- Millwright / Machine Operator
- Glaziers / Electrician

Team Global Employment Agency

Call: (416) 514-0733
Email:
resume@teamglobal.ca

## GENERAL HELPERS NEEDED

Renovation வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை.
Full Time / Part Time available.
Call:
416-706-8160

உதயன் **கதிரோட்டம்**

# தேர்ந்தெடுத்த தேச மக்களுக்காக தம்மை தியாகம் செய்ய வேண்டியவர்கள் மக்கள் விரோதிகளாகவே செயற்படுகின்றார்கள்

உலகில் அனைத்து நாடுகளிலும் தேர்தல்கள் இடம்பெறுகின்றன. அந்தத் தேர்தல்களில் மக்கள் தலைவர்களையும் பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுத்து ஆட்சீயை அவர்களிடம் ஒப்படைக்கின்றார்கள். இவ்வாறு மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் தலைவர்கள் மக்களுக்காக தங்களை தியாகம் செய்ய வேண்டிய பொறுப்புக்கள் கொண்டவர்கள் என்பதை மறந்து தங்கள் தேசத்தின் மக்களுக்கு விரோதமாகவே செயற்படுகின்றார்கள்.

இவற்றுக்கு பல காரணங்கள் உள்ளன. பல வேறுபாடுகள் தொடர்பாக அரசியல் தலைவர்கள் தங்களை வகைப்படுத்துகின்றார்கள். இன ரீதியான வேறுபாடுகள், மொழி ரீதியான வேறுபாடுகள், வர்க்க ரீதியான வேறுபாடுகள் என தங்கள் முன்னாள் தெரியும் யதார்த்தங்களை வைத்து அவர்கள் தங்கள் நடவடிக்கைகளை ஆரம்பிக்கின்றார்கள்.

பல்வேறு தேசிய இனங்கள் வாழும் சோவியத் யூனியனில் அவை அனைத்தும் சம உரிமைகளோடு நிம்மதியாக வாழும் வழிகளை மார்க்ஸ் லெனின் போன்ற சிந்தனையாளர்கள் வகுத்தார்கள். ஆனால் சோவியத் யூனியனின் சரிவிற்கு பின்னர் அவர்களின் சித்தாந்தங்கள் மற்றும் வழி முறைகள் ஆகியன வேறு நாடுகளுக்கு பரவிட முடியாமல் மறைக்கப்படுகின்றன. சொந்த நாட்டிலேயே சித்தாங்களை மறுதலிக்கும் தலைவர்கள் அங்கு ஆட்சியில் அமர்ந்திருப்பதே அதற்குக் காரணம். இவ்வார கதிரோட்டத்தில் இவ்வாறான விடயத்தை நாம் கையில் எடுத்ததற்கு பல காரணங்கள் உள்ளன. எமது தாயகத்தில் நீண்ட நெடுங்காலமாக ஆட்சியாளர்களின் இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டதும் அதற்கு அடுத்ததாக வர்க்க வேறுபாட்டை கடைப்பிடிக்கும் போக்கு காரணமாகவும் அங்கு இனப்பிரச்சனை என்பது தீர்க்கப்பட முடியாத ஒன்றாகவே உள்ளது. இதன் காரணமாக அங்கு ஆயுதப் போராட்டம் இடம்பெறவே அதன் காரணமாக பெரும்பான்மை அரசின் எதிர்நடவடிக்கையின் விளைவாக இனப் படுகொலைகளும் அதனைத் தொடர்ந்து எம் இனம் சார்ந்த ஆயிரக்கணக்கானவர்கள் காணாமல் ஆக்கப்பட்ட துன்பியல் படலங்களும் அரங்கேறின. ஆனால் நாம் முன்னர் குறிப்பிட்ட ஆட்சியாளர்கள் என்ற வர்க்க இணக்கப்பாடு காரணமாக பல நாடுகளிலிருந்து ஆட்சியாளர்களினால் அனுப்பி வைக்கப்பட்ட படைகள் எமது தாயக மண்ணில் இனப்படுகொலைகளை நடத்தி நிற்க, அதனைத் தொடர்ந்து மக்கள், தாக்குதல்களின் கோரப்பிடிக்குள்ளாகி காணாமல் ஆக்கப்பட்டும் மறைக்கப்பட்டும் எங்குள்ளார்கள் என்பதே அறிய முடியாமல் தவிக்கும் நிலையில் அவர்களின் நெருங்கிய உறவுகள் காலத்தைக் கழிக்கின்றார்கள்.

அவ்வாறு காணமல் ஆக்கப்பட்டவர்களுக்காக அவர்களைப் பெற்றவர்கள், உற்றவர்கள் என நூற்றுக்கணக்காக வீதிகளில் போராடி வருகின்ற இந்த நாட்களில் அவர்களுக்காக தங்களை வருத்திக் கொண்ட கனடிய உறவுகள் ஏழு பேர் நீண்ட நடையில் தங்கள் அர்ப்பணித்தார்கள்.:.

கனடாவின் தலைநகரான ஒட்டாவாவில் தேசத்தின் பிரதமர் அவர்களின் பிரதிநிதியிடம் இலங்கையில் காணாமலாக்கப்பட்ட தங்கள் உறவுகளுக்கு நீதி கேட்டு விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ளார்கள். மேற்படி நடைப் போராட்டத்தின் தாக்கம், தற்போது எமது மக்களின் மனங்களில் சற்று போராடும் சிந்தனையைத் தோற்றுவித்துள்ளது என்றால் அது மிகையாகாது.

இவ்வாறு பார்க்கும் போது, மக்களைப் பாதுகாக்க வேண்டிய அலலது அவர்களுக்காக தியாகங்களைப் புரிய வேண்டிய அரசியல் தலைவர்களாலும் அரசாங்கங்களாலுமே இவ்வாறான இனப்படுகொலைகளும் காணமலாக்கப்படும் கொரூரங்களும் இடம்பெறுகின்றன என்றால் அது மிகையாகாது. உலகின் அனைத்து நாடுகளிலும் ஆட்சி பீடங்களில் உள்ளவர்களாலேயே ஏற்படுத்தப்படுகின்றன என்றால் அதுதான் உண்மை என்று உரத்துச் சத்திமிடலாம்.

இதைத் தவிர இன்னோர் வகையான உறவாடும் தன்மை நாம் மேற்கூறிய பல நாடுகளின் ஆட்சியாளர்கள் மத்தியில் தாம் காண்பதாக ஐக்கியநாடுகள் மனிதஉரிமை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

ஐக்கியநாடுகள் மனிதஉரிமை ஆணையாளர் அங்கு தனது உரையில் தெரிவித்துள்ளதை விட இலங்கையில் புதிய ராஜபக்ச அரசாங்கத்தின்கீழ் மனித உரிமை நிலவரம் மோசமானதாக உள்ளதாக தென்னாபிரிக்காவை தளமாக கொண்ட அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் அழிக்கப்பட்டுள்ள போதிலும் பெரும்பான்மை இனவாத அரசாங்கம் உருவாக்கப்பட்டுள்ள போதிலும் இலங்கையுடன் தொடர்ந்தும் வழமையான நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என மேற்குஉலக மற்றும்வடஅமெரிக்கா நாடுகள் சிந்திக்கின்றன என சர்வதேச உண்மைமற்றும் நீதிக்கான திட்டத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் யஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை யுத்தகுற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டனர் என குற்றம்சாட்டப்பட்ட சிரேஸ்ட இராணுவஅதிகாரிகளை அரசாங்கத்தின் முக்கிய பதவிகளுக்கு நியமித்தமை குறித்து கண்டிப்புடன் கேள்வி எழுப்பியுள்ளது என சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு பார்க்கும் போது தற்போது இலங்கையில் யுத்தக்குற்றங்களுக்கு பொறுப்புக்களைக் கூறவேண்டியவர்களோ ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்து ஆட்சித் தவைர்களோடு கைகுலுக்குவதும் கொண்டாடுவதுமாக இருக்க, அரியாசணங்களே அவமானத்தினால் தவைகுனிவது போன்றே எமக்குத் தெரிகின்றது.

## அமெரிக்க தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக உயர் கல்வி சார்ந்த தகவல்களை வழங்க ஏழு அமெரிக்க பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் கலந்து கொள்ளும் இணைய வழி கலந்துரையாடல்

(முழு விபரம் பின் பக்கம்)



# கனடாவில் 'நண்பன் விருதுகள்' வழங்கும் விழா
# 'NANBAN' awards ceremony in Canada

நண்பன் WORLDWIDE விருது

சென்னையில் தலைமையகத்தைக் கொண்டியங்கும்
'நண்பன்' இணையத்தளத்தின் ஏற்பாட்டில் கனடாவில் ஒரு
எளிமையான

## விருது விழா

**The Estate Banquet & Event Centre.**
430, Nugget Avenue, Scarborough.Ont M1S 4A4.

September 20 2020 Sat @ 6.30 p.m

**Chief Guest: Hon. Raymond Cho** ( Ontario's Minister of Seniors and Accessibility )

Desjardins Financial Security — Solution to Insurance and Financial Needs
Yo K Gamar — B.BA / Business Management
Dir. 416-917-7263
•Life Insurance •Disability Insurance •Mortgage Insurance •Super Visa •Estate planning
•Group Plans •R.R.S.P •Long Term Care •Segregated Funds

Majestic City shopping center Open to the public
Crish Sivakolunthu
647 218 3698
416 291 3555
2900 Markham Rd, Scarborough, ON M1X 1E6

TIMES IRON WORKS INC.
CONTACT
Times Iron Works Inc.
38 Gormley Industrial Ave.
Stouffville, ON L0H 1G0
Tel:- 905 831 5111
Fax:- 905 831 5181

Shankar & Co
Sri Lankan, Indian and Canadian Grocery
416-759-5100
2425 Eglinton Ave E
Scarborough, ON M1K 5G8

JRB universal inc
* Home Mortgage * 2nd Mortgage * Re-Financing * Commercial Mortgage * Business Loan * Line of Credit
All Approved
R.R.Rajkumar
647-289-6164

Thinking of Buying, Selling or Investing?
Contact Me
Vijay Muthumani
Sales representive
647 963 0705
Homelife Today Realty Ltd Brokerage
210-30 Progress Ave, Toronto, ON M1P 4S6
Off: 416 298 3200
Fax 416 298 3440
Full MLS Services | Open house every week | Mortgage Service | New Development Projects | Leasing Homes and Rental | Commercial Properties | Property Management

INCOME TAX! INCOME TAX!! INCOME TAX!!!
PERSONAL — CORPORATION — NEW HOME HST FILLING
SELVA VETTYVEL
416 568 4301
905 471 4050
204-7 EASTVALE DRIVE
MARKHAM ON, L3S 4N8

Designs solution for any Media
Grapghic Designing - Printing - and More
Designs 2 Prints
S.Prabagar
647 858 2290
416 292 4999
www.designs2prints.com
info@designs2prints.com
2900 Markham Road, #G1
Scarborough, ON
M1X 1E6.

SEYON FINANCIAL SERVICE
416-438-3350 / 647-268-2300
We are the Specialist in:
➡ Personal Income Tax
➡ Corporation Tax
➡ GST / HST - Houseing Rebate
➡ CONDO / HOUSE Flipping issues
US TAX
Negotiation with CRA
Appeals with CRA
Settlement with CRA

கோவிட்-19 நோயின் தாக்கம் வலுவாக பரவத் தொடங்கிய காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பெற்ற எமது நண்பன் இணையத்தளம் தற்போது உலகெங்கும் அறியப்பட்ட ஒன்றாக விளங்குகின்றது. தொடர்ந்து வரும் ஆண்டுகளில் யாழ்ப்பாணம், சென்னை, கோலாலம்பூர் போன்ற நகரங்களில் "நண்பன் விருதுகள்" வழங்கும் விழாக்கள் நடைபெறவுள்ளன.

நண்பன் WORLDWIDE

குறிப்பு:- அழைக்கப்பட்ட நண்பர்கள் மட்டுமே கலந்து கொள்ளலாம்: விருந்துபசாரமும் உண்டு.
மேலதிக விபரங்களுக்கு:- மரியராசா:- 416 669 6437

NANBAN WORLDWIDE



# Carefirst Family Health Team
## Accepting New Patients

## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com



# யாழ்ப்பாணம் முகமாலையில் சீருடைகள், எலும்பு துண்டுகள் மீட்கப்பட்டுள்ளன



கிளிநொச்சி முகமாலை பகுதியில் சீருடைகள், கால் பகுதி எலும்பு துண்டுகள், பற்றிகள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டு வரும் ஊழியர்களினால் இவை அடையாளம் காணப்பட்டு பளை பொலிசாருக்கு நேற்று (புதன்கிழமை) தகவல் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பான விசாரணைகளை பளை பொலிசார் முன்னெடுத்து வருகின்றனர்.

# நல்லூர் வடக்கில் இளைஞர் மீது வாள்வெட்டு



யாழ்ப்பாணபொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இராணிவீதி நல்லூர் வடக்கில் இன்று காலை 6:30 மணிக்கு குறித்த நபர் பூ புடுங்குவதற்காக சென்ற போது நான்கு மோட்டார் சைக்கிளில் கறுத்த துனி மூகமூடி அணிந்த இனந்தெரியாத வாள்வெட்டு கும்பலால் நாயன்மார்கட்டு பகுதியை சேர்ந்த சுந்தர் என அழைக்கப்படும் இளைஞர் ஒருவரே சரிமாரியாக வெட்டப்பட்ட நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கோப்பாய் மற்றும் யாழ்ப்பாணம் பொலிஸார் குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

# நல்லூர் பிரதேச சபை செயலாளர் மீது தாக்குதல் நடத்திய நபர் கைது!

நல்லூர் பிரதேச சபைக்குள் உட்புகுந்து சபையின் செயலாளர் எஸ்.சுதர்சன் மீது தாக்குதல் நடத்திய சந்தேக நபர் கோப்பாய் பொலிஸாரால் இன்று (17)கைது செய்யப்பட்டுள்ளார்.

தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, யாழ்ப்பாணம் நல்லூர் அரசடியைச் சேர்ந்த ஒருவர், திருநெல்வேலி சந்தை தொகுதியில் உள்ள கடை தொடர்பில் பிரதேச சபைச் செயலாளரால் கட்டுப்பாடு விதிக்கப்பட்டதாகத் தெரிவித்து பிரதேச சபைக்குள் சென்று முரண்பட்டுள்ளார்.





குறித்த சந்தேக நபர் திடீரென பிரதேச சபைச் செயலாளரை தாக்கியுள்ளார். தாக்கிவிட்டுத் தப்பிச் செல்ல முற்பட்ட போதும், அவரை தடுத்துவைத்த பிரதேச சபை ஊழியர்கள் கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேக நபரின் தாக்குதலுக்கு உள்ளன நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடமை நேரத்தில் அரச ஊழியரை அலுவலகத்தில் உன்புகுந்து தாக்கிய சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதர்கான நடவடிக்கையை கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# இலங்கையின் உள்நாட்டு பொறிமுறைகளில் நம்பிக்கையில்லை

## - அனுசரணை நாடுகள் அறிவிப்பு!

இலங்கையின் உள்நாட்டு நல்லிணக்க செயற்பாடுகளில் தமக்கு நம்பிக்கையில்லை என்று இலங்கை மீதான ஐ நா மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்துக்கு பிரதான அனுசரணை வழங்கிய நாடுகள் தெரிவித்துள்ளன.

ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையின் 45அமர்வில் ஜெனீவா தீர்மானத்துக்கு பிரதான அனுசரனை வழங்கிய நாடுகள் இதனை தெரிவித்துள்ளன. ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளர் தனது உரையில் இலங்கை குறித்து வெளியிட்ட கரிசனைகளை கருத்தில் எடுத்துள்ளோம் எனவும் அந்த நாடுகள் குறிப்பிட்டுள்ளன.

கனடா ஜேர்மனி பிரித்தானியா வடக்குமசெடோனியா மற்றும் மொன்டிநீக்ரோ ஆகிய நாடுகளின் சார்பில் உரையாற்றிய பிரிட்டனின் மனித உரிமை விவகாரங்களுக்கான தூதுவர் ரீட்டா பிரென்ஞ் இதனை தெரிவித்துள்ளார். அடுத்த மார்ச் அமர்வில் இலங்கை தொடர்பாக மனித உரிமை ஆணையாளர் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையை பேரவை ஆராயும் என அவர் தெரிவித்துள்ளார்.

2015 ஜெனீவா தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மனித உரிமை பேரவை ஆராயும் என ரீட்டா பிரென்ஞ் தெரிவித்துள்ளார். குறிப்பிட்ட தீர்மானத்தின் மூலம் இலங்கை கடந்தகால காயங்களை ஆற்றுவதற்கும் மனித உரிமை ஆணையாளரினால் பதிவு செய்யப்பட்ட தீர்வுகாணப்படாத பாரிய உரிமை மீறல்கள் மற்றும் துஸ்பிரயோகங்களுக்கு தீர்வை காண்பதற்குமான கருத்துடன்பாட்டுடனான கட்டமைப்பை ஜெனீவா தீர்மானம் மூலம் மனித உரிமை பேரவை உருவாக்கியது என அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட கட்டமைப்பு கருத்துடன்பாட்டுடனும் இலங்கையின் முழுமையான ஆதரவுடனும் பேரவையால் இரண்டு முறை புதுப்பிக்கப்பட்டது என ரீட்டா பிரென்ஞ் தெரிவித்துள்ளார்.



இலங்கை அரசாங்கம் அந்த தீர்மானத்தை தொடர்ந்தும் ஆதரிக்கவில்லை என தெளிவாக பேரவைக்கு தெரிவித்துள்ளது என குறிப்பிட்டுள்ள ரீட்டா பிரென்ஞ் இது குறித்து ஜெனீவா தீர்மானத்துக்கு பிரதான ஆதரவை வழங்கிய நாடுகள் மீண்டும் ஏமாற்றத்தை தெரிவிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கம் நாட்டின் பல்வேறுபட்ட சமூகத்தினர் மத்தியில் நல்லிணக்கம் சமாதானசகவாழ்வு நீதி ஆகியவற்றினை ஏற்படுத்துவதற்கான தனது தொடரும் அர்ப்பணிப்பை வெளியிட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். இலங்கை அரசாங்கம் புதிய உள்நாட்டு பொறிமுறையொன்று இந்த நிகழ்ச்சிநிரலை முன்னெடுக்கும் என குறிப்பிட்டுள்ளது நாங்கள் இந்த அர்ப்பணிப்பை பாராட்டும் அதேவேளை கடந்தகாலங்களில் முன்னெடுக்கப்பட்ட அவ்வாறன உள்நாட்டு நடவடிக்கைகள் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுதல் மற்றும்உண்மையாள நல்லிணக்கம் ஆகியவற்றை ஏற்படுத்துவதில் கவலை தரும் விதத்தில் போததான்மை கொண்டவையாக காணப்பட்டுள்ளன எனவும் ரிட்டா பிரென்ஞ் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் புதிய அணுகுமுறை குறித்து இந்த பேரவை கவனம் செலுத்த விரும்புகின்றது,கடந்த கால முயற்சிகளில் இருந்து இந்த முயற்சி எவ்வளவு வித்தியாசமானதாக காணப்படும் மக்களை மையப்படுத்தும் என்பதை அவதானிக்க விரும்புகின்றது எனவும் தெரிவித்துள்ள அவர் காணாமல்போனவர்கள் குறித்த அலுவலகம் இழப்பீட்டுகளுக்கான அலுவலகம் உட்பட சுயாதீன ஆணைக்குழுக்களின் எதிர்காலம் முக்கியமானது எனவும் கூறியுள்ளார்.

# மன்னாரிலும் செவ்வாயன்று திலீபனின் நினைவேந்தலுக்கு நீதி மன்றம் தடை



இலங்கையில் தடை செய்யப்பட்ட அமைப்பான விடுதலை புலிகள் அமைப்பின் அரசியல் அமைப்பு தலைவராக செயல்பட்டு மரணித்த ராசையா பார்த்தீபன் அல்லது திலீபனின் நினைவு நாளை நினைவு கூறுவதற்கு மன்னார் நீதவான் நீதி மன்றத்தால் செவ்வாய்கிழமையன்று தடை விதித்தது.

மன்னார் நீதி மன்ற அதிகார எல்லைக்குள் தியாகி திலீபனின் நினைவஞ்சலில் நிகழ்வை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக கிடைக்கப்பெற்ற புலனாய்வு தகவல்களுக்கு அமைவாக தடை செய்யப்பட்ட அமைப்பான விடுதலை புலிகளை மீள் எழுச்சி செய்யும் நோக்கில் நித்திலம் பதிப்பகத்தின் உரிமையாளர் சிவகரன் மன்னார் நகரமுதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் மன்னார் நகரசபை உப தவிசாளர் செபஸ்டியன் ஜான்சன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஊடாக ஏற்பாடு மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்து குறித்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் நினைவஞ்சலி நிகழ்வு நடாத்துவதால் குறித்த வீதியில் வாகன நெரிசல் ஏற்படும் என்பதுடன் இவ் நிகழ்சியில் கலந்து கொள்ளும் மக்களுக்கு கிளர்சிபற்றிய எண்ணங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாகவும் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழலுக்கும் இவை பங்கம் ஏற்படுத்தும் என்பதாலும் 2020-09-15 தொடக்கம் 2020-09-28 வரையான கலப்பகுதியில் மன்னார் நீதவான் நீதிமன்ற அதிகார எல்லைக்குள் நினைவேந்தல் நிகழ்வு நடாத்துவதற்கு உடனடி தடை உத்தரவு பிரப்பிக்கப்படுள்ளது.

அத்துடன் வி எஸ்.சிவகரன் மன்னார் நகரமுதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் மன்னார் நகரசபை உப தவிசாளர் செபஸ்டியன் ஜான்சன் வன்னி பாரளுமன்ற உறுப்பினர் சாள்ஸ்நிர்மலநாதன்,செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரை 2020-09-28 காலை 09 மணியளவில் மன்னார் நீதவான் நீதி மன்றத்தில் முன்னிலையாகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த உத்தரவுக்கு எதிராக சிவகரனால் மேன்முறையீடு மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடதக்கது.

# திலீபன் நினைவு நிகழ்வுகளை கிளிநொச்சியிலும் தடை போட்டது நீதிமன்றம்

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பின் அலுவலகத்திலோ அல்லது ஏனைய பிரதேசங்களிலும் தியாகி திலீபனின் நினைவு நிகழ்வுகளை நடத்தக்கூடாது என தடை உத்தரவு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தியாகி திலீபனின் நினைவு நிகழ்வு ஆரம்பமாகியுள்ள நிலையில் இந்த நிகழ்வுகளை நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு நீதிமன்றத்தினால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது இதேபோன்று இன்று(16-09-2020) கிளிநொச்சி அமைந்துள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பு மாவட்ட அலுவலகமான அறிவகத்திற்கு வருகை தந்த கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சென்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் அவர்களிடம் நீதிமன்ற கட்டளையை வழங்கியுள்ளார்.



கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஏ.ஆர். 1304 /20 என்ற வழக்கின் பிரகாரம் 15 9 2020 தொடக்கம் 28.09.2020 வரையான நாட்களில் எந்தவிதமான அஞ்சலி நிகழ்வையும் அல்லது ஊர்வலங்கள் கூட்டங்கள் எதனையும் நடத்தக் கூடாது என கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது மேற்படி கட்டளையை கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் தலைமை பொலிஸ் பரிசோதகர் ஜீவகஸ்த பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கட்டளையை இன்று பகல் 11 30 மணியளவில் வழங்கியுள்ளார்-




# ரஷ்யாவின் ஸ்புட்னிக் – 5 கொரோனா தடுப்பு மருந்து இந்தியாவில் தயாராகிறது

உலகிலேயே முதன்முதலாக கரோனா வைரஸுக்குத் தடுப்பூசி கண்டுபிடித்துவிட்டதாக அறிவித்த ரஷ்யா, தான் தயாரித்த ஸ்புட்னிக்-5 தடுப்பூசியை இந்தியாவில் உள்ள மிகப்பெரிய மருந்து தயாரிப்பு நிறுவனமான டாக்டர் ரெட்டிஸ் நிறுவனத்துக்கு 10 கோடி எண்ணிக்கையில் சப்ளை செய்ய ஒப்பந்தம் செய்துள்ளது. கரோனா தடுப்பூசியைக் கண்டுபிடிக்க உலகில் பல்வேறு நாடுகள் முயற்சி செய்து வரும் நிலையில், தடுப்பூசியை வெற்றிகரமாக உருவாக்கிவிட்டதாக முதல் நாடாக ரஷ்யா அறிவித்தது. ஆனால், அதன் பாதுகாப்பு அம்சம் குறித்து பல்வேறு தரப்பினரால் கேள்வி எழுப்பப்பட்டது. இதனால் மருந்தின் மீ-தான நம்பகத்தன்மையை மக்களுக்குத் தெரியப்படுத்தும் வகையில் ரஷ்ய அதிபர் புதின் தனது மகளுக்கே இந்த மருந்தைச் செலுத்தியதாக அறிவித்தார். ரஷ்ய அரசு தயாரித்துள்ள ஸ்புட்னிக்-5 தடுப்பூசி வரும் 13 ஆம் தேதிக்குள் பொதுமக்கள் பயன்பாட்டுக்காக வெளியிடப்படும் என ரஷ்ய சுகாதாரத்துறை அறிவித்திருந்தது.

இந்தச் சூழலில் இந்தியாவுக்கு வழங்க ரஷ்யா நேரடி முதலீடு நிதி-யம் (ஆர்டிஐஎப்) மிகப்பெரிய மருந்து தயாரிப்பு நிறுவனமான டாக்டர் ரெட்டிஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து 10 கோடி மருந்துகளை வழங்குவதாகத் தெரிவித்துள்ளது. இந்தியாவில் 30 கோடி தடுப்பூசி மருந்துகள் தயாரிக்க டாக்டர் ரெட்டிஸ் நிறுவனத்துடன், ரஷ்யா நேரடி முதலீடு நிதியம் (ஆர்டிஐஎப்) ஒப்பந்தம் செய்துள்ளது. மேலும், ஸ்புட்னிக்-5 தடுப்பூசி மருந்தின் 3-ம் கட்ட கிளினிக்கல் பரிசோதனையை இந்தியாவில் நடத்தவும் ரெட்டிஸ் நிறுவத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளதாகவும் ரஷ்யா நேரடி முதலீடு நிதியம் (ஆர்டிஐஎப்) தெரிவித்துள்ளது. இந்தியாவில் ஸ்புட்னிக்-5 தடுப்பூசிகளின் கிளினிக்கல் பரிசோதனையை நடத்த டாக்டர் ரெட்டிஸ் நிறுவனத்துக்கு இன்னும் அனு-மதி கிடைக்கவில்லை. கிளினிக்கல் பரிசோதனை நடத்தப்பட்டால், இந்த ஆண்டு இறுதிக்குள் தடுப்பூசி மருந்து இந்தியாவுக்கு சப்ளையாகும். டாக்டர் ரெட்டிஸ் நிறுவனத்தின் தலைவர் ஜி.பி.பிரசாத் கூறுகையில், “ஸ்புட்னிக்-5 தடுப்பு மருந்து, இந்தியாவில் கரோனாவுக்கு எதிராக நமது போராட்டத்தில் நம்பகத்தன்மையான கருவியாக அமையும். இந்த மருந்தின் விலை குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை. லாபநோக்குடன் இந்த மருந்தைத் தயாரிக்கவில்லை என்று ஆர்டிஐஎப் முன்பு தெரிவித்திருந்தது. இந்தியாவில் கிளினிக்கல் பரிசோதனையை நடத்த ரஷ்ய நிறுவனம் உதவி செய்வதாகவும் தெரிவித்துள்ளது.10 கோடி மருந்துகளை சப்ளை செய்ய ரஷ்ய நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது” என்று தெரிவித்தார்.

# கனடாவுக்கு பயணமாக இருந்த 12 பேர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது!



போலி விசாவில் கனடாவுக்கு புறப்படத் தயாரான போது 12 இலங்கையர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஐவர் பெண்கள் என்றும், ஏழு பேர் ஆண்கள் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். கிரிபத்கொட, நுகேகொட, மாவனெல்ல, அலவத்துகொட, கேகாலை, பொல்கஹவெல, ஆகிய இடங்களைச் சேர்ந்த இவர்கள், 21 வயதுக்கும், 55 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்றும் காவல்துறையினர் கூறியுள்ளனர்.


நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து புறப்படத் தயாரான போது கைது செய்யப்பட்ட 12 பேரும், நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

அவர்களில் 11 பேரை பிணையில் செல்ல உத்தரவிட்ட நீதிவான், பயணத்துக்கான ஒழுங்குகளைச் செய்த பெண்ணை, 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார்.



யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்:

# திலீபனை நினைவு கூரும் காலத்தில் சமகால அரசியலை மதிப்பீடு செய்வது



அமரர் அரசையா ஒரு நாடகக் கலைஞர். மீசையை முறுக்கிக் கொண்டு நிமிர்ந்து நடப்பார். தமிழரசுக்கட்சியின் சத்தியாகிரக போராட்டத்தில் ஈடுபட்டவர். சத்தியாக்கிரகப் போராட்டம் தொடர்பில் அதிகம் கவனிப்பைப் பெற்ற ஒளிப்படம் ஒன்று உண்டு. அதில் போலீசார் வீதியில் விழுந்து கிடக்கும் ஒரு சத்தியாகிரகியின் நெஞ்சில் துப்பாக்கியை வைத துக்கொண்டிருகிறார்.

அந்தப் படத்தில் காணப்படும் சத்தியாகிரகி அரசையாதான். அவரை 1990களின் தொடக்கத்தில் ஒரு தேவைக்காக நான் சந்தித்தேன். அப்போது கேட்டேன் "தமிழரசுக்கட்சி உண்மையாகவே சத்தியாகிரகத்தில் ஈடுபட்டதா? காந்தி கூறிய சத்யாகிரகி ஒருவருக்கு இருக்கக்கூடிய எல்லா அம்சங்களும் தமிழரசுக்கட்சியின் சத்தியாக்கிரகிகள் என்று அழைக்கப்பட்டவர் களிடம் இருந்தனவா?" என்று அதற்கு அரசையா பின்வரும் தொனிப்பட பதில் சொன்னார்...

"போராட்டத்தில் ஈடுபட்ட நாங்கள் எல்லாரும் உண்மையாகத்தான் அதில் இறங்கினோம். ஆனால் எங்களில் எத்தனை பேர் அதில் தொடர்ச்சியாகப் போராடி உயிரைத் துறக்க தயாராக இருந்தார்கள் என்ற கேள்வி இங்கு முக்கியமானது. நாங்கள் சத்தியாக்கிரகத்தை உயிரை துறக்கும் ஓர் உச்சம் வரை முன்னெடுக்கவில்லை. முன்னெடுக்கத் தயாராக இருக்கவில்லை. அது சாகத் தயாரானவர்களின் போராட்ட வழிமுறையாக இருக்கவில்லை. மாறாக அது சாகப் பயந்தவர்கள் புகலிடமாகவே



இருந்தது. திலீபனை போலவும் இப்போதுள்ள ஆயுதப் போரா-ளிகளைப் போலவும் ஒரு 500 பேர் அன்றைக்கு எங்களோடு நின்றிருந்தால் நிலைமை வே-றாக இருந்திருக்கும். இப்படி ஒரு ஆயுதப் போராட்டத்துக்கு தேவையே இருந்திருக்காது. எங்களுடைய தலைமுறையே போராடி முடித்திருக்கும்" என்று தமிழரசுக்கட்சியின் சத்தியாகிரகிகளுக்கும் திலீபனுக்கும் அன்னை பூபதிக்கும் இடையில் உள்ள வேறுபாடு அதுதான். தமிழ் மிதவாதிகளுக்கும் காந்திக்கும் இடையில் இருந்த வேறுபாடும் அதுதான்.

காந்தியை பொறுத்தவரை அகிம்சை ஒரு வாழ்க்கை முறை அது சாகத் துணிந்தவனின் போராட்ட வழிமுறை. அதற்காக உயிரைத் துறக்க காந்தி தயா-ராக காணப்பட்டார். அதற்காக முதலில் உயிரைத் துறக்க அவர் தயாராக இருந்தார். ஆனால் தமிழரசுக் கட்சியின் அகிம்சை போராட்டம் அப்படி அல்ல. அது சாகத் துணிந்தவர்களின் ஆயுதமாக அல்ல. சாகப் பயந்தவர்களின் உத்தியாகவே கையில் எடுக்கப்பட்டது. அதனால் அந்தப் போராட்டத்தை ஒரு கட்டத்துக்கு மேல் அவர்களால் முன்னெடுக்க முடியவில்லை. அரசாங்கம் குண்டர்களின் மூலமும் காவல்துறையின் மூலமும் தமிழரசுக் கட்சியின் அகிம்சைப் போராட்டங்களை ஒடுக்கிய பொழுது அதற்கு அடுத்த கட்டம் என்ன என்பதைக் குறித்து ஒரு தெளிவான வரை வழி வரைபடம் கட்சியிடம் இருக்கவில்லை. ஏனெனில் அக்கட்சி அந்தப் போராட்டத்தை விசுவாசமாக முழு அர்ப்பணிப்போடு முன்னெடுக்கத் தயா-ராக இருக்கவில்லை. அதாவது சாகத் தயாராக இருக்கவில்லை.

இதுதான் பிரச்சினை. இப்படிப்பட்ட ஒரு பின்னணியில் திலீபன் சாகத் தயாராக இருந்தார். அன்னை பூபதி சாகத் தயாராக இருந்தார். திலீபன் ஒரு காந்தியவாதி அல்ல. பலர் அவரையும் காந்தியையும் ஒப்பிட்டுக் குழப்புவது உண்டு. அது தவறு. காந்தி வேறு. திலீபன் வேறு. அன்னை பூபதி வேறு. காந்தியைப் பொறுத்தவரை அகிம்சை ஒரு வாழ்க்கை முறை. அது ஒரு ஆன்மீகப்பயிற்சி மட்டும் அல்ல. ஒரு மக்கள் கூட்டம் தங்கள் விடுதலையை வென்றெடுப்பதற்கான அரசியல் செயல் வழியும் கூட. புத்தபகவானிடமிருந்த ஆன்மீக செயல் வழியை காந்தி அரசியல் செயல் வழியாக மாற்றினார். புத்தரிடம் அகிம்சை ஒருஆன்மீக செயல் வழியாக இருந்தது. காந்தி அதனை ஒரு போராட்ட ஒழுக்கமாக மாற்றினார். காந்தியைப் பொறுத்தவரை அகிம்சை தான் எல்லாம். அவர் அதற்காக சாகும் உச்சம் வரை போக தயாராக இருந்தார். தானே முதலில் சாகவும் தயாராக இருந்தார். என்பதனால்தான் அவர் "என்னுடைய வாழ்க்கையே என்னுடைய செய்தி" என்று கூற முடிந்தது.

திலீபன் அப்படியல்ல. அவர் ஓர் ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை வைத்து அந்தப் போராட்டத்தில் தன் உயிரைத் துறக்க இணைந்தவர். அவருடைய ஒழுக்கம் அகிம்சை அல்ல. ஆயுதப் போராட்டம் தான். ஆனால் அவர் உயிரிழந்தது அகிம்சை வழியில் போராடி. எனவே அவரை பொறுத்த வரையிலும் அகிம்சை ஒரு வாழ்க்கை முறை அல்ல. ஆயுதப் போராட்டம் தான் வாழ்க்கை முறை. எனவே அகிம்சையின் வார்த்தைகளில் சொன்னால் திலீபனின் மரணம் தான் அவருடைய செய்தி. அதாவது அகிம்சையோ ஆயுதப் போராட்டமோ எதுவானாலும் அதில் உயிரை துறக்கும் உச்சம் வரை போகத தயாராக இருக்க வேண்டும் என்பதே திலீபனின் செய்தி. அன்னை பூபதி இந்த இருவரில் இருந்து வித்தியாசமானவர்.ஒருவிதத்தில் அவர் திலீபனின் அடிச்சுவடுகளை பின்பற்றினார் எனினும் அவருக்கென்று ஒரு தனித்துவம் உண்டு, அவர் ஒரு போராளியாக இருக்கவில்லை. தன் பிள்ளைகளை போருக்கு கொடுத்தார். அதன் விளைவாக ஓர் அரசியல் செயற்பாட்டாளராக மாறினார். அன்னையர் முன்னணியில் ஒரு உறுப்பினராக இருந்தார். அவருக்கு முன் போராடிய அன்னம்மா என்று அழைக்கப்பட்ட ஒரு பெண் போராட்டத்தை இடையில் கைவிட்டார். அதனால் போராட்டம் இடையில் தடுமாறத் தொடங்கியது. சர்ச்சைகளுக்கும் அபகீர்த்திக்கும் உள்ளாகியது. அந்த அபகீர்த்தியிலிருந்து பூபதி போராட்டத்தை மீட்டெடுத்தார். அவர் ஒரு குடும்பப் பெண். சாகத் தயாராக எந்த ஓர் இயக்கத்திலும் இணைந்தவர் அல்ல. எனினும் அவர் சாகத் துணிந்து உண்ணாவிரதம் இருந்தார்.

திலீபனை விடவும் கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகமான நாட்கள் அவர் பசியோடும் தாகத்தோடும் இருந்தார். ஒரு சாதாரண குடும்பப் பெண் எவ்வளவு உன்னதமான தியாகங்களைச் செய்ய முடியும் என்பதற்கு பூபதி ஒரு முன்னுதாரணம். அதைவிட முக்கியமாக வடக்கையும் கிழக்கையும் அவர் தனது பசியினாலும் தாகத்தினாலும் இணைத்தார். வடக்கையும் கிழக்கையும் இணைத்த அகிம்சா முன்னுதாரணம அவர்.

நடந்து முடிந்த நாடாளுமன்றத தேர்தலின் பின்னணியில் பிள்ளையானின் வெற்றியை முன்வைத்து பிரதேச உணர்வுகளை தூண்டும் விதத்தில் உரையாடல்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும் ஒரு பின்னணியில் பூபதியின் முக்கியத்துவம் இன்னும் அதிகமாக உணரப்படுகிறது. பூபதி உண்ணாநோன்பிருந்து வடக்கையும் கிழக்கையும் இணைத்தவர் என்ற அடிப்படையில் அவர் வித்தியாசமான ஒரு முன்னுதாரணம். அவருக்கு வேறு நிகரில்லை. திலீபனும் பூபதியும் மிக எளி-மையான கோரிக்கைகளை முன் வைத்து உண்ணாவிரதமிருந்தார்கள். அந்த அற்ப கோரிக்கைகளைக்கூட நிறைவேற்ற இலங்கை அரசாங்கம் தயாராக இருக்கவில்லை, அதன் மூலம் அப்போது நிலவிய சமாதானச் சூழலின் இயலாமை-களை அவர்கள் அம்பலப்படுத்தினார்கள்.புலிகள் இயக்கத்துக்கும் இந்திய அமைதி காக்கும் படைக்கும் இடையிலான மோதலை நோக்கி தமிழ் கூட்டு உளவியலை-த் தயாரித்ததில் இருவருடைய உண்ணாவிரதங்களுக்கும் பங்குண்டு. இந்திய அமைதி காக்கும் படை தமிழ் பகுதிகளுக்குள் வந்தபோது ஆரத்தி காட்டி மாலை போட்டு வரவேற்ற ஒரு மக்கள் கூட்டத்துக்குள் இருந்து அதே படையை நோக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

பூபதி; காந்தி; திலீபன் ஆகிய மூவருக்கும் உள்ள ஒரே ஒற்றுமை தங்களுடைய லட்சியங்களுக்காக அவர்கள் உயிரைத் துறப்பதற்குத் தயாராக இருந்தார்கள் என்பதுதான்.

அரசியல் செயற்பாடு எனப்படுவது அர்ப்பணிப்பும் தியாகமும் சுய சித்திரவதையும் சுயசோதனைகளும் நிறைந்ததுதான் என்பதனை இந்த மூன்று பேரும் நிரூபித்தார்கள். ஆனால் கடந்த 11 ஆண்டுகளாக தமிழ் அரசியல் அப்படிப்பட்டது அல்ல. நேர்மை துணிச்சல் அர்ப்பணிப்பு மிக்க தலைவர்களை மிக அரிதாகவே காண முடிகிறது. மிகச் சிலரைத் தவிர பெரும்பாலானவர்கள் பிழைப்புவாதிகள் ˙ சுயநலமிகள் நபுஞ்சகர்கள். அரசியலை ஒரு பிழைப்பாக பார்க்கிறவர்கள். தேசியத்தை ஒரு முகமூடியாக அணிந்து கொள்பவர்கள். அயோக்கியர்கள்.

அவர்கள் அடிக்கடி போராட்டம் வெடிக்கும் என்று அறிக்கைகள் விடுவார்கள். ஆனால் நாட்டில் அப்படி எந்தப் போராட்டமும் கிடையாது. பாதிக்கப்பட்ட மக்கள் தான் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகவும் காணிக்காகவும் போராடினார்கள். போராடிக் கொண்டிருகிராார்கள். திலீபனை போல அன்னை பூபதியைப் போல உயிரைத் துறக்க எந்த ஒரு அரசியல்வாதியும் தயாரில்லை. அவர்கள் சாகும் வரை உண்ணாவிரதமெல்லாம் இருக்க வேண்டாம். குறைந்தபட்சம் தமது வாக்குறுதிகளுக்கு நேர்மையாக வாழ்ந்து காட்டலாம். நீதிக்கும் அர்ப்பணிப்புக்கும் தியாகத்துக்கும் முன்னுதாரனமாக நடக்கலாம். தமக்குக் கிடைக்கும் சலுகைக-ளை-யும் சுகபோகங்களையும் துறக்கலாம். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சித் தலைவர்களும் குறைந்தது ஒரு நாளாவது அதுவும் திலீபனின் இறுதி நாளிலாவது முழுமையாக உணவின்றி நீரின்றி உண்ணாவிரதம் இருக்கலாம்.

# பொலிஸ் தடையை மீறி தாயக உறவுகள் அமைப்பின் மந்துவில் படுகொலை நினைவேந்தல்!





முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு, மந்துவில் பகுதிய-ில் விமானப்படை விமானங்கள் நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதலில் கொல்லப்பட்ட 24 பொதுமக்களின் 21 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு இன்று உணர்வுபூர்வமாக அனுஸ்டிக்கப்பட்டது.

தாயக உறவுகள் நினைவேந்தல் அமைப்பின் இணைப்பாளர் ச. ரூபன் ஏற்பாட்டில் இந்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றுள்ளது. உயிர் நீத்த உறவுகளுக்காக அகவணக்கம் செலுத்தி மலர்தூவி அஞ்சலி செலுத்தி நிகழ்வுகள் இடம்பெற்றன.







இந்திய செய்திகள்

# பெற்றோரைக் கவனிக்காத பிள்ளைகள் மீது நடவடிக்கை எடுக்கும் சென்னை உயர் நீதிமன்றம்



பெற்றோரைக் கவனிக்காத பிள்ளைகள் மீது புகார் அளித்தால் 6 வார காலத்திற்குள் மனு மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என வருவாய்க் கோட்டாட்சியர்களுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கம் சார்பில் அதன் தலைவர் அய்யாகண்ணு உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

அவரது மனுவில், "மத்திய அரசு, 2007-ம் ஆண்டு கொண்டு வந்த பெற்றோர், மூத்த குடிமக்கள் நலன் மற்றும் பராமரிப்புச் சட்டத்தை, அமல்படுத்தும் வகையில் தமிழக அரசு 2009 ஆம் ஆண்டு விதிகளை வகுத்தது. இருப்பினும், இந்தச் சட்டத்தை அதிகாரிகள் அமல்படுத்துவதில்லை. மகன்களால் பராமரிக்கப்படாத பெற்றோரிடம் இருந்து புகர்களைப் பெற மண்டல வருவாய் அதிகாரிக்கு இந்தச் சட்டப் பிரிவு அதிகாரம் வழங்கியுள்ளது. ஆனால், இந்தச் சட்டத்தை அமல்படுத்த அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதால், சட்டத்தை அமல்படுத்த அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும்" எனக் கோரியுள்ளார். இந்த வழக்கை இன்று விசாரித்த நீதிபதிகள் எம்.எம்.சுந்தரே', ஆர்.ஹேமலதா அமர்வு, பெற்றோர், மூத்த குடிமக்கள் நலன் மற்றும் பராமரிப்புச் சட்டத்தின் படி பெற்றோரைக் கவனிக்காத பிள்ளைகள் மீது மூத்த குடிமக்கள் புகார் அளித்தால் 6 வார காலத்திற்குள் புகார் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வருவாய்க் கோட்டாட்சியர்களுக்கு உத்தரவிட்டு வழக்கை முடித்துவைத்தது.

# ஜல்லிக்கட்டு தமிழ்நாட்டுக்கானது, நீட் தேர்வு பிரச்சினை அப்படியல்ல என்கிறார் அமைச்சர் விஜயபாஸ்கர்

ஜல்லிக்கட்டுக்கு விலக்கு பெற்றதுபோல நீட் தேர்வுக்கு விலக்கு பெறுவதற்கு வழிவகை இல்லை. அப்படி ஒரு எள் அளவு, எள் முனை அளவு, ஊசி நுழையக்கூடிய முனை அளவு நமக்கு இடம் இருந்தால், அதிலே முதலில் நுழைந்து அந்த "நீட்"டிலே வெற்றியை நிலைநாட்டுவதற்குத் தயாராக இருக்கிறது அதிமுக அரசு என அமைச்சர் விஜயபாஸ்கர் சட்டப்பேரவையில் ஸ்டாலினுக்குப் பதிலளித்தார். ஜல்லிக்கட்டுக்கு எப்படித் தீர்வு காணப்பட்டதோ, அதேபோன்று நீட் தேர்வை ரத்து செய்ய மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து சட்ட முன்வடிவை உருவாக்கலாம் என சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் ஸ்டாலின் பேச-ியது சாத்தியமில்லாதது என அமைச்சர் விஜயபாஸ்கர் பேரவையில் விளக்கம் அளித்தார். இது தொடர்பாக அமைச்சர் விஜயபாஸ்கர் பேசும்போது, ""இன்றைக்கு "நீட்" என்ற பாதிப்பு உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு வந்த காரணத்தினால், எந்த ஒரு ஏழை மாணவனுக்கும், கிராமப்புற மாணவனுக்கும் ஒரு பாதிப்பு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகத்தானே, 150 மடங்காக ஒரே ஆண்டிலே இன்றைக்கு 65 ஆண்டுகளிலே பெற்ற வளர்ச்சியை பத்தே ஆண்டுகளில் பெற்றது அதிமுக அரசா, இல்லையா சொல்லுங்கள். இதில் எப்படி நாம் கொள்கையை விட்டுக் கொடுப்போம்? நீங்கள் சொல்லுங்கள். திராவிட வழியிலே வந்தவர்கள் நாம். எப்படி நம்முடைய உணர்வுகளை விட்டுக்கொடுப்போம்? எப்படி உரிமையை நாம் விட்டுக்கொடுப்போம்? ஆனால், இதில் இந்தக் காரண காரியங்களைப் பேசா-மல், இதிலே அரசியல் செய்வது மட்டும்தான் வேதனையாக இருக்கிறது. இதில் அரசியல் செய்வதுதான் வேதனையாக இருக்கிறது. எல்லோரும் உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டவர்கள். ஏற்கெனவே முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, திமு-கவோடு விவாதம் செய்தபோது இதே சட்டப்பேரவையில் சொன்னார். திமுக இந்த "நீட்" பிரச்சினையில், "தும்பை விட்டு நீங்கள் வாலைப் பிடிக்கிறீர்கள்" என்பதை அவர் அழகாகச் சொல்லியிருக்கிறார். தும்பை விட்டது என்பது உண்மைதான். அது வரலாற்றிலே ஒரு கருப்பு நாள். 27-12-2010 என்பது வரலாற்றிலே ஒரு மிகப்பெரிய கருப்பு நாள்.

இந்தக் கருப்பு நாளை மறைப்பதற்காகத்தான் இன்றைக்கு காங்கிரஸார் வெளிநடப்பு செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆக, எந்தக் காலத்திலும் அதிமுக "நீட்" எதிர்ப்புக் கொள்கையில் உறுதியாக இருக்கிறது. ஆனால், மாணவர்களைக் குழப்பக்கூடாது. நான் எதிர்க்கட்சித் தலைவரை அன்போடு கேட்கிறேன். நீங்கள் சொல்கிறீர்கள், 8 மாதத்தில் நீட் தேர்வு ரத்து செய்யப்படும் என்று சொல்கிறீர்கள். அது எப்படிச் செய்ய முடியும்? அந்த வழியை நீங்கள் சொல்லுங்கள். அதை இப்பொழுதே செய்வதற்கு அதிமுக அரசு தயாராக இருக்கிறது. ஏனென்றால், எதிர்க்கட்சித் தலைவர், மாணவர்களைக் குழப்பக்கூடாது. பெற்றோர்களைக் குழப்பக் கூடாது. மாணவர்களையும், பெற்றோர்களையும் குழப்பி, அவர்களைத் திசை மாற்றிவிடக்கூடாது. அதிலேதான் நமக்குப் பிரச்சினை வரும். அந்த மனச்சோர்வு அதிலேதான் ஏற்படும். அதனால், உச்ச நீதிமன்றத் தீர்ப்புப்படி, இப்பொழுது என்ன நிகழ்வோ அந்த நிகழ்வு. ஆனால், தொடர்ந்து அரசியல் அழுத்தம், சட்டப் போராட்டம், உச்ச நீதிமன்றத்தில் மூல வழக்கு என்று எல்லா வி'யத்திலும் எல்லோரும் எல்லோருடைய மூல உணர்வோடு எல்லாம் சேர்த்துத்தான் போட்டோம். எல்லோரும் சேர்ந்து திமுக, அதிமுக எல்லோரும் சேர்ந்துதான் அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றினோம். அதனுடைய நிலையும் உங்களுக்குத் தெரியும். ஆனால், அதற்கு விதிகள் இல்லை. ஆனால், இப்போது நீங்கள் மாணவர்களிடம், நீங்கள் 8 மாதங்களில் "நீட்" தேர்வு என்பது கிடையாது என்ற ஒரு வாக்குறுதியை நீங்கள் மாணவர்கள் மனதிலே சொன்னால், அந்த வழி-வகை எப்படி என்பதை நீங்கள் சொன்னால், அதை இப்பொழுதே செய்வதற்கு அதிமுக அரசு தயாராக இருக்கிறது.



ஜல்லிக்கட்டு ஓராண்டுக்கு நம்முடைய அரசு சார்பிலே அப்போதைய நம் முதல்வர் சென்று, விலக்கு பெற்றது என்பது உண்மை. ஆனால், ஜல்லிக்கட்டு என்பது தமிழகத்திலே மட்டும் நடக்கக்கூடிய நிகழ்வு. தமிழகத்திற்கு மட்டுமான நிகழ்வு. ஆந்திராவிலேயோ, கர்நாடகத்திலேயோ இல்லை. இது ஒரு மாநிலத்தினுடைய பிரச்சினை. தமிழகத்தில் மட்டும்தான் இந்தப் பிரச்சினை இருந்தது. ஆனால், "நீட்" பிரச்சினை என்பது இன்றைக்கு இந்தியாவிலே இருக்கக்கூடிய எல்லா மாநிலங்களும் ஏற்றுக்கொண்டு விட்டன. காங்கிரஸ் கட்சி ஆளக்கூடிய, முதல்வராக இருக்கக்கூடிய மாநிலத்திலும் ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். கம்யூனிஸ்ட் கட்சி ஆளக்கூடிய, முதல்வராக இருக்கக்கூடிய மாநிலத்திலும் ஏற்றுக்கொண்டு விட்டார்கள். நீங்கள் கூட்டணியிலே சேர்ந்து சொல்லக்கூடிய மேற்கு வங்காளம், அந்த மாநிலத்திலும் ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். எல்லா மாநிலங்களும் ஏற்றுக்கொண்டு விட்டார்கள். இப்பொழுதும் சட்டப் போராட்டம் நடத்தி, இப்பொழுதும் அரசியல் அழுத்தம் கொடுத்து, கடைசி விளிம்புவரை போராடிக் கொண்டிருக்கக்கூடிய ஒரே மாநி-லம் இன்றைக்கு தமிழ்நாடு மட்டும்தான். அதனால், ஜல்லிக்கட்டுக்கு விலக்கு பெற்றதுபோல இதற்கு விலக்கு பெறுவதற்கு வழிவகை இல்லை என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி ஒரு எள் அளவு, எள் முனை அளவு, ஊசி நுழையக்கூடிய முனை அளவு நமக்கு இடம் இருந்தால், அதிலே முதலில் நுழைந்து அந்த "நீட்"டிலே வெற்றியை நிலைநாட்டுவதற்குத் தயாராக இருக்கிறது அதிமுக அரசு. முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அந்தக் கொள்கையிலே உறுதியாக இருந்தார். தற்போதைய முதல்வர் அந்தக் கொள்கையிலே இன்றைக்கும் உறுதியாக இருக்கிறார் அரசு உறுதியாக இருக்கிறது. அதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லை. உணர்வோடு இருக்கிறோம். ஆனால், வரலாற்றுப் பிழை என்பதை நாம் மனதிலே வைத்துவிட்டு, அதை மனதி-லே வைக்காமல், மறுத்துவிட்டு, மறைத்துவிட்டு அதை நாம் இப்பொழுது அரசியல் செய்வது மட்டும்தான் வேதனையாக இருக்கிறது என்பதை நான் மீண்டும் பதிவு செய்ய விரும்புகின்றேன்"". இவ்வாறு அமைச்சர் விஜயபாஸ்கர் பேசினார்.




# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private – Work Insurance
- MVA – WSIB
- ODSP – Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle – Knee – Back Braces

**ENGLISH & TAMIL – SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறாார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**



# SKN FINANCIAL

www.sknfinancial.com




**கனடாவில் மிகக் குறைந்த வட்டி வீதத்தில் தங்க அடைவு செய்யக் கூடிய ஒரே அடைவு மாடம்**

- $ அவசரப் பணத் தேவையா? புதிய வியாபாரம் தொடங்கப் பணம் தேவையா?
- $ புதிய மனைஸ்ன வாங்குவதில் பணச்சிக்கலா?
- $ உங்கள் மாதாந்த வட்டியை வங்கியில் கட்டும் வசதியும் உண்டு
- $ உங்கள் அடைவுகளை இலகுவாக மீட்பதற்குப் பலவிதமான திட்டங்கள் உள்ளன
- $ வட்டித் தொகைக்கு வரிவிலக்கு பற்றுச் சீட்டு வழங்கபடும்

முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டது

உங்கள் நகைகளுக்குப் பாதுகாப்பு!..
குறைந்த வட்டி!..[2% முதல்]
நிறைந்த பெறுமதி!...
www.sknfinancial.com

**SCARBOROUGH**
801 Markham Road
(Painted Post Plaza)
Markham & Ellesmere
647-729-5238

**BRAMPTON**
85 Kennedy Road South, Unit 33
( Next to TIM HORTONS )
Kennedy & Steeles
905-499-0800

# தமிழ்நாட்டை கனடாவின் பக்கம் திரும்பச் செய்த ரொரான்ரோ உலகத் தமிழ் திரைப்பட விழா 2020




ரொரான்ரோ தமிழ் திரைப்பட விழா இம்மாதம் மிகவும் பிரமாண்டமாக நடைபெற இருந்த நிலையில், COVID-19 காரணமாக மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சிறப்பாக கடந்தவாரம் நடைபெற்று விருதுகளும் அறிவிக்கப்பட்டன.

இதற்கான பணிகள் சகல மட்டங்களிலும் கடந்த ஜனவரி மாதம் முதல் ஆரம்பமாகி திரைப்பட விழாவுக்கான திரைப்படங்களும் பல்வேறு பிரிவுகளில் கோரப்பட்டிருந்தன. உலகெங்கிலும் இருந்து 242 படங்கள் விழாவுக்கு சமர்ப்பிக்கப்பட்டித்தந்தது.

உலகின் தலைசிறந்த ஜூரி குழுமம், சகல திரைப்படங்களையும் பார்த்தது வெற்றிபெற்ற திரைப்படங்களை தேர்வுசெய்திருந்தார்கள். அதில் இயக்குநர் பார்த்திபனின் "ஒத்த செருப்பு சைஸ் 7" விழாவில், மூன்று விருதுகளை வென்றுள்ளது! ஜீரி விருதான சிறந்த படம், சிறந்த இயக்குநர், சிறந்த தனி சோலோ நடிப்பு என மூன்று விருதுகளை இப்படம் பெற்றுள்ளது. சூர்யாவின் தயாரிப்பில் வெளிவந்த இயக்குனர் ஹலிதா சமீம் இயக்கிய சில்லுக்கருப்பட்டி திரைப்படம் 2 விருதுகளை வென்றுள்ளது.

இலங்கை, இந்திய, மலேசியா, பிரான்ஸ், கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் இருந்து வந்த படங்களுக்கு விருதுகள் கிடைத்துள்ளன.

விருதுகள் விபரம்:
Jury Award
Jury Award Best Feature Film: OTHTHA SERUPPU size 7 (Director/Producer R. Parthiban)
Jury Award Best Feature Film Director: Radhakrishnan Parthiban (OTHTHA SERUPPU size 7)
Jury Award Best Feature Film Women Director: Halitha Shameem (SILLU KARUPPATTI)
Jury Award Best Experimental Feature Film: SILLU KARUPPATTI (Director: Halitha Shameem)
Jury Award Best Trans-Themed Feature Film: COFFEE CAFE (Arunkumar Senthil)
Jury Award Best Crime Thriller Feature Film: Pulanaivu (Director: Shalini Balasundaram)
Jury Award Best Feature Documentary Film: The Lamp of Truth (Director: Thanesh Gopal)
Jury Award Best Short Film Director: Anand Murthy (S I N A M)
Best Solo Act Award: Radhakrishnan Parthiban (OTHTHA SERUPPU size 7)
Audience Award
Audience Award Best Feature Film: Kanni Maadam (Director: Bose Venkat)
Audience Award Best Short Films: Kaadaaru (Director: Calis Peter Xavier)
Audience Award Best Short Films: Hunter Maniyam (Director: Mathi Sutha)
Audience Award Best Long Short Films: Female (Director: Karthik Siva)
Special Jury Award: Outstanding Performance
Rising Star Emerging Director: Mathi Sutha (Hunter Maniyam)
Rising Star Emerging Actress: Sutharshi Ignatius (Irai)
Best Short Film: Flood (Director: Sivalingam Vimalrajh)
Awards For Album Song
Award for Best Album Song: Kaatril (Srivijay Ragavan)
Award for Peace Song: Namakken Aararivu (ShriRam Sachi)

உலகில் பல முன்னணி திரைப்பட விழாக்கள் நடைபெற்றாலும், தமிழருக்கான திரைப்பட விழாக்கள் என்பது மிகவும் குறைவானதாகவே காணப்படுகின்றன. இந்திய மற்றும் இலங்கைக்கு அப்பால், தமிழர்கள் அதிகம் வாழும் கனடாவில் இந்நிகழ்வு ஒழுங்குசெய்யப்பட்டு நடத்தப்படுவது மிகவும் சிறப்பானதாக கருதப்படுகின்றது.




பல்லாயிரம் தமிழ் திரைப்படங்கள், குறும்படங்கள் என்பன வெளிவருகின்ற போதிலும், அத்திரைப்படங்கள் தமிழ் அல்லாத திரைப்பட விழாக்களிலேயே சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரத்தை வேண்டி நிற்கும் நிலையே இதுவரை காலமும் தமிழ் திரை கலைஞர்களுக்கும், திரைப்படங்களுக்கும் உள்ள நிலை.

நிச்சயமாக ரொரான்ரோ தமிழ் திரைப்பட விழா இக்குறையை எதிர்வரும் காலங்களில் மிகவும் சிறப்பானதாக நிறைவுசெய்யும். தமிழ் திரைப்படங்களையும், அதன் பின்னால் உள்ள கலைஞர்களையும் ஊக்கப்படுத்தி, பாராட்டி, மகிழ்ந்து கொண்டாட எதிர்வரும் ரொரான்ரோ தமிழ் திரைப்பட விழா வரும் செப்டம்பர் 2021 ரொரான்ரோவில் நடைபெறவுள்ளது.

# பெண்ணுரிமைக்காகப் போராடியதால் அவர் "பெரியார்"

பகுத்தறிவுப் பகலவன் எனப் போற்றப்படும் தந்தை பெரியார் மறைந்து 47 ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால் இன்னும் அவருடைய சித்தாந்த எதிரிகளால் கூட அவரை மறக்கமுடியவில்லை. அவ்வப்போது அவரது சிலையை சேதப்படுத்தி உள்ளுக்குள் மகிழ்ந்து கொள்கிறார்கள்.

அதேநேரம் கடவுள் நம்பிக்கை கொண்ட பெரும்பான்மை தமிழக மக்கள் இன்னும் பெரியாரை கொண்டாடி மகிழ்கிறார்கள். ஏன்? வெறும் கடவுள் மறுப்பு மட்டுமே அவரது கொள்கையா என்றால் கிடையவே கிடையாது.

1879 செப்டம்பர் 17-ந் தேதி ஈரோட்டில் வெங்கடப்ப நாயக்கர்-சின்னத்தாயம்மை தம்பதிக்கு மகனாகப்பிறந்த ஈ.வெ.ராமசாமியான அவர், அதிகம் படிக்கவில்லை. ஆனால் சமுதாயத்தை நன்கு கற்று உணர்ந்தார். சாதியால் மதத்தால் மக்கள் அடிமைப்படுத்தப்படுவதைக் கண்டு கொதித்து எழுந்தார். அவரது வாழ்வு முழுக்க முழுக்க அறச்சீற்றத்தின் விளைவால் எழுந்த போராட்டங்களிலேயே கழிந்தது.

"தேர்தல் பாதை திருடர் பாதை"

காங்கிரஸ் பேரியக்கத்தில் இணைந்திருந்த அவர், ஒரு கட்டத்தில் அதுவும் சாதி ஆதிக்கத்தால் கட்டமைக்கப்பட்டது கண்டு வெளியேறி, நீதிக்கட்சியில் பணியாற்றி, 1944-ல் திராவிடர் கழகத்தை தொடங்கினார். "தேர்தல் பாதை, திருடர்கள் பாதை" என பகிரங்கமாக குறிப்பிட்ட அவர், இறுதி வரை பகுத்தறிவு பிரசாரத்திலேயே கவனம் செலுத்தினார். (அவரது திராவிடர் கழகம் இன்று வரை தேர்தலில் போட்டியிடுவதில்லை).

"மானமும், அறிவும் மனிதர்க்கு அழகு", "நானே எது சொன்னாலும், அதை அப்படியே ஏற்கவேண்டாம். உன் பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்து முடிவு எடு" என்று அடிக்கடி சொல்லி வந்தார். சாதியக்கொடுமை ஒழியவேண்டும், பெண்ணடிமைத்தனம் கூடவே கூடாது என முழங்கி வந்தார்.

- முதன்முதலில் தான் வகித்த ஈரோடு நகராட்சித்தலைவர் பதவி உள்பட 29 பதவிகளை துறந்து பதவிகள் ஏதுமின்றி 60 ஆண்டுகளுக்கு மேலாய், தனது 94 ஆம் வயதுவரை மக்கள் பணியில் ஈடுபட்டவர்.
- செல்வக் குடும்பத்தில் பிறந்தும் (1900 ஆம் ஆண்டுகளிலேயே சுமார் 25 கோடிகளுக்கு பெரியார் அதிபதி) சமூகத்தின் அடித்தட்டு மக்களின் துயரங்களை சிந்தித்து அதற்காக தன் ஆயுளை செலவிட்டு இறுதியில் தன் சொத்துக்களை மக்களுக்கே விட்டுச் சென்றார்.
- அக்காலத்திலேயே விதவை மறுமணத்தை ஆதரித்தவர், பெண் கல்வியை வலியுறுத்தியவர், பெண்களுக்கு சொத்துரிமை அளிக்கவேண்டும் என்று சொன்னவர். பெண்களுக்காகப் போராடியதால் பெண்களே அவருக்கு அளித்த பட்டம் தான் "பெரியார்" பட்டம்.

"அரசியல் எதிரியின் மகளுக்கு மறுமணம் செய்து வைத்த பெரியார்"

- பெரியாருக்கு நேரெதிர் சித்தாந்தம் கொண்ட தலைவர், ராஜாஜி. அவருடைய மகள் லட்சுமி, குழந்தை திருமணம் செய்து வைக்கப்பட்டு அந்த குழந்தைக் கணவன் ஐந்தே மாதத்தில் இறந்து அந்த பெண் குழந்தை லட்சுமி விதவையாகி, பள்ளிக்கூட படிப்பு நிறுத்தப்பட்டு, மொட்டையடிக்கப்பட்டு மூலையில் அமர்த்தப்பட்டாள். இது, தனிப்பட்ட முறையில் நெருங்கிய நண்பரான பெரியாரின் பார்வையில் படுகிறது. ராஜாஜியை பெரியார் திட்டுகிறார். பின்பு மகாத்மா காந்தியாரை பெரியார் சந்தித்து, அவர் மகன் தேவதாசை லட்சுமிக்கு மணமுடிக்க ஏற்பாடு செய்கிறார். ராஜாஜியின் அறிவுக்கு உதிக்காத இந்த மறுமணம் பெரியாரால் நடத்தி வைக்கப்பட்டது.



- மனிதன் அனைவரும் சமம் அவனுக்குள் மேல் சாதி, கீழ் சாதி என்ற பிரிவினை இருக்கக் கூடாது என சாதிக்கொடுமையை கடுமையாக எதிர்த்தவர், பெரியார்.
- சாதிகள் மதத்தினால் தான் தோன்றுகின்றன என்று சொல்லி, மதத்தை தூக்கி எறிந்தவர். அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகவேண்டும் என்று போராடியவர்.
- சாஸ்திரங்களையும் சம்பிரதாயங்களையும் சொல்லி, மதங்கள் மனிதர்களை மூடனாக்குகின்றன என்று கொந்தளித்ததால் தான் இன்றும் ஒரு சாரரின் விமர்சனம் பெரியார் மீது தொடருகிறது.
- "பக்தி வந்தால் புத்தி போய் விடும், புத்தி வந்தால் பக்தி போய் விடும்" என தத்துவம் பேசியவர், அவர்.
- பெண்ணுரிமைப் போராளியான பெரியார், பெண்களை அடிமைப்படுத்தும் தேவதாசி முறையை ஒழிக்க அரும்பாடுபட்டவர். "பெண் ஏன் அடிமையானாள்?" என்று அவர் எழுதிய புத்தகம் இன்றைய இளையதலைமுறை பெண்களாலும் விரும்பி வாசிக்கப்படுகிறது.

கடவுள் மறுப்புக்கு பெரியாரின் விளக்கம்

- "நீ உணரும் பசியை நானும் உணர்கிறேன், அதனால் பசி இருக்கிறது என ஏற்றுக் கொள்கிறேன், ஆனால் நீ உணரும் கடவுளை என்னால் உணர முடியவில்லை அதனால் கடவுளை மறுக்கிறேன்" என கடவுள் மறுப்புக்கு விளக்கம் சொன்னவர்.
- தமிழ் எழுத்து சீர்திருத்தம் கொண்டுவந்தவர், முதன்முதலாக திருக்குறள் மாநாடு நடத்தி, பொதுமக்களிடம் திருக்குறளை கொண்டுபோய் சேர்த்தவர். தெலுங்கு, சமஸ்கிருத சங்கீதத்துக்கு எதிராக தமிழிசைக்கு மேடை அமைத்து ஆதரவளித்தவர், தந்தை பெரியார்.
- இந்தி மொழித் திணிப்பை கடுமையாக எதிர்த்தவர். 1937 ஆம் ஆண்டில் அதற்காக பல போராட்டங்களை செய்து, சிறைக்கு சென்றவர். தமிழ்நாடு தமிழருக்கே என்று முழங்கியவர் தந்தை பெரியார்.
- இந்தியா முழுவதும் சமூக, கல்வி, வேலைவாய்ப்பில் புறக்கணிக்கப்பட்ட பெரும்பான்மையான இந்து மக்கள் தங்களின் உரிமையான இடஒதுக்கீட்டை சட்டப்படி பெற வழிவகுத்தவர் தந்தை பெரியார். இந்தியா சுதந்திரம் அடைந்தவுடன், இடஒதுக்கீட்டிற்கு அரசியல் சட்ட ரீதியில் தடை வந்தபோது, கடுமையான போராட்டங்களை நடத்தி, இந்தியாவின் அரசியலமைப்பு சட்டத்தில், முதல் திருத்தமாக, இடஒதுக்கீட்டிற்கு ஆதரவான சட்டத்தை கொண்டுவர வழிவகுத்தவர், பெரியார்.

அவர் பிறந்து 141 ஆண்டுகள் (17-09-1879) மறைந்து 47 ஆண்டுகள் (24-12-1973). ஆனால் சாதி, சமய ஏற்றத்தாழ்வுகள், ஆதிக்கசக்திகள் ஒழியும் வரை அவர் வாழ்ந்து கொண்டே தான் இருப்பார்.

**- மணிராஜ்,**
**திருநெல்வேலி**

# GWC
## Gibson Wellness Centre

**வாகன விபத்தில் கடுமையாக காயம் அடைந்தீர்களா?**

We specialize in serious and catastrophic injuries.

**உங்கள் காப்புறுதி நிறுவனத்திலிருந்து உங்களுக்கான தீர்வு கிடைக்கும் வரை**

**$100,000** வரை வட்டியில்லாத கடனாக பெற்றுக்கொள்ள எங்களை அழையுங்கள்.

CALL NOW TO RECEIVE UP TO
$100,000 IN INTEREST-FREE LOANS
to assist with your financial needs until you receive
a settlement from your insurance company

If top-notch service is your wish, don't wait, call Thavem Krish



# டரன் கிருபா
கனேடிய தமிழ் சட்டத்தரணி

Darren Kirupa, J.D.
Barrister & Solicitor

**416.904.9118**

7130 WARDEN AVE, SUITE 606
MARKHAM, ON. L3R 1S2


Amma Brand
இப்பொழுது கனடாவிலும் கிடைக்கின்றது!
Amma
Apple Cider
with Mother Vinegar
LOOSE WEIGHT
HELPS IN :
WEIGHT MANAGEMENT
GLOWING SKIN
GOOD FOR HEART
BLOOD PRESSURE
URIC ACID
100% Natural
NOW IN CANADA
Amma Apple Cider with Mother Vinegar
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471
Premium Quality
Amma
Gingelly Oil
(Contains Permitted Anti-Oxidants)
சுத்தமான நல்லெண்ணெய்
NOW IN CANADA
Import and Deliver
AMMA FOOD INC. 647-832-5471
750ml
375ml
Amma Herbal
Juices
NOW IN CANADA
Jamun with Karela Juice
Aloe Vera Juice
Karela Juice
Amla Juice
Super Energizer
Neem Leaf with Aloe Vera Juice
Body Pain Relax Juice with Aloe Vera
Aloe Noni with Aloevera Juice
100% HERBAL
100% NATURAL
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471

# பாடசாலைகளைப் பாதுகாப்பாக மீண்டும் திறப்பது அனைவருக்கும் முக்கியமானது

**அதற்காகவே** பிள்ளைகளையும் ஊழியர்களையும் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு ஏற்ற முறையில் ஒரு விரிவான திட்டத்தை உருவாக்குவதற்கு, ஒன்ராறியோ அரசாங்கமானது சுகாதார அதிகாரிகள், பாடசாலைச் சபைகள் மற்றும் கல்வியாளர்களுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது.

- மேசைகளுக்கிடையில் அதிக தூரம் விடுதல், குறியீடுகளையும், தரை அடையாளங்களையும் இடுதல் மற்றும் ஒரு-வழிச் சிறுபாதைகள் போன்ற **உடல் ரீதியாகத் தூரப்படுத்தும்** நடவடிக்கைகள் செயற்படுத்தப்படும்.
- 4-12 வகுப்புகளில் உள்ள ஊழியர்களுக்கும் மாணவர்களுக்கும் **முகக் கவசங்கள் பாவிப்பது** அவசியமாக்கப்படும்.
- கை சுத்திகரிப்பு மற்றும் கை கழுவுதல் மூலம் **கைச் சுகாதாரம்** செயற்படுத்தப்படும்.
- **மேலதிகமான தாதியர்**கள் பாடசாலைகளில் இருப்பார்கள்.
- **பாடசாலையின் சுத்தம்** மேம்படுத்தப்படும்.



மேலும் அறிய **ontario.ca/ReopeningSchools** ஐப் பார்வையிடவும்.
இதற்குரிய கட்டணம் ஒன்ராறியோ அரசாங்கத்தால் செலுத்தப்பட்டுள்ளது

Ontario


LEASE TO OWN
$58.88
WEEKLY
+TAX
2020 COROLLA L CVT
1.69% LEASE FOR 60 MONTHS, 20,000 km/year
LEASE TO OWN
$88
WEEKLY
+TAX
2020 RAV-4 LE FWD
4.99% LEASE FOR 60 MONTHS, 20,000 km/year
USED CARS
COROLLA - 10 IN STOCK
From $10,600 - 2012 & up
+ tax
CAMRY - 10 IN STOCK
From $17,700 - 2015 & up
+ tax
RAV-4 - 15 IN STOCK
From $14,500 - 2012 & up
+ tax
SIENNA - 5 IN STOCK
From $30,363 - 2017 & up
+ tax
USED VEHICLES
HONDA
LEXUS
BMW
LAND ROVER
YORKDALE TOYOTA
3080 Dufferin Street
Toronto, ON M6A 2S6
Dufferin & Lawrence
www.yorkdaletoyota.com
NO CREDIT
BAD CREDIT
NO PROBLEM!
2021 Venza Hybrid
is at the Showroom
Book for Test Drive
FOR TONY SIVA'S CLIENTS!!!
FREE Winter Tires
with every purchase of
New or Used Vehicle
$0 DOWN
on
New or Used
Vehicles
புதிய பாவித்த
வாகனங்களை
தமிழில் உரையாடி
மலிவு விலையில்
பெற்றுக்கொள்ள
அழையுங்கள்
Tony Siva
647-269-0749
tonymidtown@hotmail.com
www.yorkdaletoyota.com

# வாழ்வாதாரம் பாதித்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் உயர்க்கல்விக்கு உதவிய காரைக்குடி தனியார் மருத்துவமனை மருத்துவர்கள்



கரோனா ஊரடங்கால் வாழ்வாதாரம் பாதித்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் உயர்க்கல்விக்கு சிவகங்கை மாவட்டம் காரைக்குடி தனியார் மருத்துவமனை மருத்துவர்கள் உதவியுள்ளனர்.கரோனா பாதிப்பு தொடர்வதால், பலரும் வாழ்வாதாரத்தை தொலைத்து உணவிற்கே சிரமப்படுகின்றனர். இந்நிலையில் ஆதரவற்றோர், பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்கள் உயர்க்கல்வியைத் தொடர முடியாதநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அவர்களுக்கு காரைக்குடி கவிதா மகப்பேறு மருத்துவமனை மருத்துவர்கள் ரமேஷ், அவரது மனைவி கவிதா உதவிக்கரம் நீட்டியுள்ளனர்.மேலும் அவர்கள் உயர்க்கல்வி படிக்க முடியாத மாணவர்களை கண்டறிந்து உதவுவதற்காக ஆரஞ்ச் ட்ரீ எஜூகேஷனல் சாரிட்டபிள் டிரஸ்ட் என்ற தொண்டு நிறுவனத்தை 2016ம் ஆண்டு முதல் நடத்தி வருகின்றனர்.

இந்த நிறுவனம் மூலம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பாலிடெக்னிக், சான்றிதழ் படிப்புகளில் சேர முடியாமல் தவிக்கும் மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படுகிறது.தாய், தந்தையை இழந்த மாணவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது. அடுத்ததாக முதல் தலைமுறை பட்டதாரி, ராணுவ வீரர்களின் குழந்தைகள், வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ளவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டு 52 மாணவர்களுக்கு ரூ.8 லட்சம் அளவிற்கு உதவித்தொகை வழங்கப்பட்டது. இந்தாண்டு கரோனா ஊரடங்கால் பலரும் வாழ்வாதாரம் இழந்துள்ளனர்.

இதனால் விண்ணப்பித்த 96 மாணவர்களையும் தேர்வு செய்து ரூ.13 லட்சம் கல்வி உதவித்தொகையாக வழங்கியுள்ளனர்.இது குறித்து மருத்துவர்கள் ரமேஷ், கவிதா ஆகியோர் கூறும்போது, ''ஒரு நாள் உதவி என்றில்லாமல் வாழ்நாள் முழுமைக்கும் அந்த உதவி பயன்பட வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த கல்வி உதவித் தொகையை வழங்குகிறோம். உதவித் தொகையானது அவர்கள் படிக்கும் கல்வி நிறுவனங்களுக்கு நேரடியாக வழங்கப்படுகிறது.அரசுக் கல்லூரி மட்டுமன்றி தனியார் கல்லூரி மாணவர்களுக்கும் வழங்கி வருகிறோம். தேர்வு செய்யப்படும் மாணவர்கள் பட்டப்படிப்பை முடிக்கும் வரை ஒவ்வொரு ஆண்டும் இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதற்காக தனியாக இணையதளம் தொடங்கி ஜூலை முதல் ஆகஸ்ட் வரை விண்ணப்பங்களைப் பெறுகிறோம்.

அடுத்த கட்டமாக கரோனா ஊரடங்கால் வாழ்வாதாரம் பாதித்த சாலையோர வியாபாரிகளைக் கண்டறிந்து அவர்களுக்குத் தேவையான உதவிகளை செய்ய முடிவு செய்துள்ளோம்'' என்றனர் .

## பெரியார் பிறந்த நாளையொட்டி புதுச்சேரியில் மணல் சிற்பம் வடிவமைப்பு: ஏராளமானோர் ரசித்தனர்



பெரியாரின் பிறந்த நாளையொட்டி அவரது உருவத்தை மணல் சிற்பமாக புதுச்சேரி வீராம்பட்டினம் கடற்கரையில் வடிவமைத்துள்ளனர். தனிமனித இடைவெளியுடன் ஏராளமானோர் இச்சிற்பத்தை ரசித்தனர்.புதுச்சேரி வீராம்பட்டினம் கடற்கரையில் தந்தை பெரியார் திராவிடர் கழகத்தினர், ஓவியரும் சிற்பியுமான குபேந்திரனுடன் இணைந்து பெரியாரின் பிரம்மாண்டமான மணல் சிற்பத்தை வடிவமைத்துள்ளனர்.

பெரியாரின் 142வது பிறந்த நாளையொட்டி மக்கள் ஏராளமானோர் மணல் சிற்பத்தைப் பார்வையிட்டனர்.சிற்பி குபேந்திரன், புதுச்சேரி பாரதியார் பல்கலைக்கூடத்தில் சிற்பக்கலை பயின்று, பெங்களூரு சித்ரகலா பரிஷத் கல்லூரியில் சிற்பக் கலையில் முதுகலைப் பட்டம் பெற்று இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட பிரம்மாண்ட மணல் சிற்பங்களை உருவாக்கியுள்ளார்.

பெரியாரின் மணல் சிற்பத்தை, இரு நாள் உழைப்பில் சுமார் 2 டன் மணல் கொண்டு உருவாக்கியுள்ளார். தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் துணைத் தலைவர் இளங்கோ கூறுகையில், "பெரியார் உருவத்துடன், பெரியார் எவ்வளவு தேவைப்படுகிறார் என்பதை உணர்த்த நீட் தேர்வால் தமிழக குழந்தைகள் உயிரிழப்பதைத் தடுக்க 'நீட் தேர்வைத் தடுத்திடு' என்பதை வலியுறுத்தியும் மணல் சிற்பம் உருவாக்கியுள்ளோம். இன்று மழை இல்லாததால் நாளை வரை இச்சிற்பங்களை அனைவரும் பார்க்க முடியும். ஏராளமானோர் பிரம்மாண்ட சிற்பங்களைப் பார்த்தனர்'' என்று தெரிவித்தார்.தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் வீரமோகன் கூறுகையில், "கரோனா தொற்றினால் அரசு வழிகாட்டுதல் வழிமுறையைக் கடைப்பிடித்து மக்கள் பார்வைக்கு வைத்துள்ளோம்.

வீராம்பட்டினம் ஊர்ப் பெரியவர்கள், மக்கள் ஆதரவுடன் மணல் சிற்பத்தை வைத்துள்ளோம். இரு நாட்களாக உழைத்தோம். எங்கள் அமைப்பினருடன் ஏராளமான ஓவியர்கள் என பத்துக்கும் மேற்பட்டோர் இச்சிற்பங்கள் உருவாகப் பாடுபட்டனர்'' என்று தெரிவித்தார்.

## கரோனா தொற்றினால் பாதிக்கப்பட்ட 45,222 குழந்தைகளுக்கு சிறப்பு சிகிச்சை: அமைச்சர் விஜயபாஸ்கர் தகவல்



கரோனா நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்ட 45 ஆயிரத்து 222 குழந்தைகளுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதாக, தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சி.விஜயபாஸ்கர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக, அமைச்சர் விஜயபாஸ்கர் இன்று (செப். 17) வெளியிட்ட அறிக்கை:"தமிழக அரசு, தமிழ்நாடு முதல்வரின் தலைமையில், கரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த தமிழ்நாடு முழுவதும் சிறப்பான நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

கரோனா தொற்றுக் காலத்திலும் அரசு மருத்துவமனைகளில் இதர மருத்துவ சேவைகள் பாதிக்கப்படக்கூடாது என்ற கருத்தை தமிழ்நாடு முதல்வர் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்.சென்னை எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் கரோனா நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்ட 542 குழந்தைகள் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று குணமடைந்துள்ளனர். மேலும், வீட்டில் தனிமைப்படுத்தப்பட்ட 372 குழந்தைகளும், ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் கரோனா நோய்த் தொற்றினால் பெற்றோர்களுடன் அனுமதிக்கப்பட்ட 30 குழந்தைகளும் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை மருத்துவர்களின் தொடர் சிகிச்சையின் மூலம் குணமடைந்துள்ளனர்.

சளி, காய்ச்சல் மற்றும் தொண்டை வலி போன்ற அறிகுறிகளுடன் கூடிய 455 குழந்தைகள், ரத்தப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 25 குழந்தைகள், ரத்த சோகையால் பாதிக்கப்பட்ட 5 குழந்தைகள், பிறவி இருதயக் குறைபாட்டுடன் கூடிய 3 குழந்தைகள், சிறுநீரகக் கோளாறால் பாதிக்கப்பட்ட 5 குழந்தைகள், நிமோனியா பாதித்த 8 குழந்தைகள், பிறவிக் குறைபாடுடன் கூடிய 5 குழந்தைகள், குடல்வால் உள்ளிட்ட அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட 5 குழந்தைகள் மற்றும் தீவிர தொற்றுடன் பாதிக்கப்பட்ட 10 பச்சிளம் குழந்தைகள் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டு மொத்தம் 944 குழந்தைகளுக்கு எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் சிகிச்சையளிக்கப்பட்டு குணமடைந்துள்ளனர்.

இதனைத் தவிர தமிழ்நாடு முழுவதும் அரசு மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் கரோனா நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்ட 45 ஆயிரத்து 222 குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு குணமடைந்துள்ளனர்தமிழ்நாடு முதல்வரின் மக்கள் நலன் காக்கும் பணிகள் மூலம் கரோனா வைரஸ் தொற்றுக் காலத்திலும் தமிழக அரசின் தொய்வில்லாச் செயல்பாடுகள் அனைவரின் கவனத்தையும் தொடர் பாராட்டினையும் பெற்றுவருகிறது". இவ்வாறு அமைச்சர் விஜயபாஸ்கர் தெரிவித்துள்ளார்.

## இந்திய வரலாற்றை ஆராயும் கலாச்சார நிபுணர் குழுவில் தென்மாநிலப் பிரதிநிதிகள் புறக்கணிப்பு: வைகோ விமர்சனம்



12,000 ஆண்டுகளுக்கு முந்தைய இந்தியக் கலாச்சாரத்தை ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட 16 உறுப்பினர்கள் கலாச்சாரக் குழுவில் தென் மாநிலங்களைச் சேர்ந்த அறிஞர்களும், மேற்கு வங்கம், வடகிழக்கு மாநிலங்களின் பிரதிநிதிகளும் இல்லாத குழு எப்படி சரியான ஆய்வை மேற்கொள்ளும் என வைகோ கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து மதிமுக பொதுச் செயலாளர் வைகோ விடுத்துள்ள அறிக்கை:"சமஸ்கிருத மொழியே இந்திய மொழிகளுக்கெல்லாம் தாய்மொழி என்றும், ஆரியர்களே இந்தியாவின் தொல்குடி மக்களின் பூர்வீகத்தினர் என்றும், வரலாற்றைத் திரித்துக் கூறும் சங்பரிவார் கூட்டத்திற்குத் துணை நிற்கும் மத்திய பாஜக அரசு, இம்முயற்சியில் அடுத்தகட்ட நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.12,000 ஆண்டுகளுக்கு முன்பான இந்தியக் கலாச்சாரத்தின் தொன்மையான வரலாற்றினை ஆய்வு செய்து நிறுவுவதற்காக, 16 உறுப்பினர்களைக் கொண்ட கலாச்சார நிபுணர் குழுவினை மத்திய அரசு அமைத்துள்ளதாக மத்திய கலாச்சார சுற்றுலாத்துறை இணை அமைச்சர் பிரகலாத்சிங் பட்டேல் நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

இந்தியத் தொல்பொருள் துறைத் தலைவர் கே.என்.தீட்சித், டாக்டர் ஆர்.எல்.பிஷ்த், டாக்டர் பி.ஆர்.மணி, பேராசிரியர் சந்தோஷ் சுக்லா, டாக்டர் ரமேஷ்குமார் பாண்டே, பேராசிரியர் மக்கன்லால், டாக்டர் ஜி.என்.ஸ்ரீவத்ஷவ, நீதிபதி முகுந்த்காந்த் சர்மா, பேராசிரியர் பி.என்.சாஸ்திரி, பேராசிரியர் ஆர்.சி.சர்மா, பேராசிரியர் கே.கே.மிஸ்ரா, டாக்டர் பல்ராம்சுக்லா, பேராசிரியர் ஆஷாத் கௌசிக், பண்டிட் எம்.ஆர்.சர்மா, மத்திய கலாச்சாரத்துறை அமைச்சகம், தொல்பொருள் ஆய்வுத்துறை ஆகியவற்றின் இரண்டு பிரதிநிதிகள் ஆகியோரை இக்குழுவின் உறுப்பினர்களாகவும் மத்திய அரசு அறிவித்துள்ளது.

இந்திய வரலாற்றின் கலை, நாகரிகம், பண்பாடு குறித்து ஆய்வு செய்வது என்றால், அனைத்து மாநில அறிஞர்களையும் இந்தக் குழுவில் இடம் பெறச் செய்திட வேண்டும். வரலாற்று ஆய்வாளர்கள், அறிஞர்கள், தொல்லியல் நிபுணர்கள், செம்மொழித் தகுதி பெற்ற சான்றோர்கள் எனப் பலரையும் இக்குழுவில் இணைத்திட வேண்டும். நாடு முழுக்க உள்ள வரலாற்று ஆய்வாளர்கள் இந்தக் குழுவில் இடம்பெற்று ஆய்வு செய்தால், ஆய்வின் முடிவு முறையாகவும், முழுமையாகவும் இருக்கும்.

ஆனால், மத்திய அரசு நியமித்துள்ள இக்குழுவில் தமிழகம் உள்ளிட்ட தென் மாநிலங்களின் பிரதிநிதிகள் இடம்பெறவில்லை. மேற்கு வங்கம், கிழக்கு இந்தியப் பகுதிகளில் இருந்தும் பிரதிநி திகள் இடம்பெறவில்லை.ஒரே நாடு; ஒரே மதம்; ஒரே கொள்கை என வெளிப்படையாகவே வேத கலாச்சாரத்தை உயர்த்திப் பிடிக்கும் மத்திய அரசின் இந்த நடவடிக்கை கடுமையான கண்டனத்துக்கு உரியது. நாடு முழுக்க உள்ள அனைத்துக் கட்சியினரும் தங்களின் நாகரிக பண்பாட்டு நடவடிக்கைகளுக்கு எதிரான இந்த முயற்சியை முளையிலேயே கிள்ளி எறிய முழு வீச்சில் செயல்பட முன்வர வேண்டுமாறு மதிமுக சார்பில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்" . இவ்வாறு வைகோ தெரிவித்துள்ளார்.


SHIRIDI SAI SCHOOL
OF CANADA
ADMISSIONS
OPEN FOR
I/S KINDERGARTEN TO GRADE 6
TO REGISTER YOUR INTEREST PLEASE CALL
416-298-3030
2701 MARKHAM ROAD, SCARBOROUGH


உங்கள் பணத்தேவைகளுக்கு
குறைந்த வட்டிவீதத்தில் அடைவு பிடிக்கப்படும்
PAWN BROKERING
பழைய பவுண்கள் நியாயமான விலையில்
பெற்றுக்கொள்ளப்படும்
Cash Point
துரித பணமாற்றுச்சேவை
வெளிநாட்டு நாணயங்கள்
வாங்கவும் விற்கவும்.
Cash Point
3852 FINCH AVENUE EAST,. UNIT G30,
SCARBOROUGH, ON, M1T 3T9
TEL: 416-284-7000


அம்மா
Amma Pawn Broker
தங்க நகை அடைவு மாடம்
கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்று முழுக் காப்புறுதி
செய்யப்பட்ட முதன்மையான அடைவுச்சேவை
உங்கள் பழைய
நகைகளை அதியுயர்
பெறுமானத்திற்கு எம்மிடம்
விற்றுக்கொள்ளலாம்
உங்கள் நகைகளுக்கு அதிகூடிய பெறுமதியையும்
மிகக்க குறைந்த வட்டி வீதத்தையும் பெற்றுக்கொள்ள
நகரின் மத்தியில் ஒரே நிறுவனம்
105A - 2425 Eglinton Ave. E, Scarborough
ammapawnbroker@gmail.com
கடைக்குப் பின்புறத்தில் போதிய வாகனத் தரிப்பிடங்கள் உண்டு
Shankar& Co. வுக்கு அருகாமையில்
1.5% முதல்
2.0%
வட்டி மட்டுமே
(per month)
416-757-0034
416-994-3861
எவ்வளவு தொகையானாலும்
மிகக் குறைந்த வட்டியுடன்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்
நம்பிக்கை
நாணயம்
உத்தரவாதம்

# வெடுக்குநாறி மலையும் அண்மைய சர்ச்சைகளும்!

- வவுனியாவிலிருந்து சர்மிலா வினோதினி



வவுனியா வடக்கின் நெடுங்கேணி நகரிலிருந்து சுமார் ஏழு கிலோமீற்றர்கள் தூரத்தில் அமைந்திருக்கின்ற எல்லைக்கிராமங்களில் ஒன்றுதான் ஒலுமடு. ஒலு என்று சொல்லப்படுகின்ற ஒரு வகைத் தாவரச் செடிகள் இங்குள்ள குளத்தில் அதிகமாக வளர்ந்து நின்ற காரணத்தினால் ஒலுமடு என்ற காரணப் பெயரைப் பெற்றது இந்தக் கிராமம்.

எளிமையும் இயற்கை அழகும் நிறைந்திருக்கின்ற கிராமத்தின் மையப்பகுதியிலிருந்து வண்டில் பாதை வழியாக சுமார் நான்கு கிலோமீற்றர்கள் வனப்பகுதிக்குள் பயணப்படுகின்ற போது இயற்கை அரணென நிமிர்ந்து நிற்கின்ற வெடுக்குநாறி மலைத் தொடர் பகுதியின் ஆரம்பப் பகுதியைக் காணலாம். பெரும் கற்கள் உருண்டு திரண்டு காட்டின் பெரு மரங்களின் இடையே உருட்டி விடப்பட்டதைப்போல காட்சியளிக்கும் சிறு குன்றுப் பகுதிகளும், ஓங்கி வளர்ந்து நிற்கின்ற காட்டு மரங்களும் அவற்றின் கீழ் உள்ள சிறு புதர்களும் கொடிகளும் செடிகளுமாக அந்த வனமும் இணைந்த மலைக்குன்றுகளும் காட்டுகின்ற காட்சிகள் அற்புதமானவை.

காட்டின் மணத்தை நுகர்ந்துகொண்டும், காட்டின் ஒலியை செவிமடுத்துக் கொண்டும் நடந்து செல்ல வெடுக்குநாறி மலையின் முதற் பகுதியை காணலாம். மலையின் முன்னும் பின்னுமாக ஒரு வகை நாற்றம் கொண்ட மரங்கள் காணப்படுவதால் வெடுக்குநாறி மலை என்கின்ற காரணப்பெயரை இந்த மலை பெற்றுக்கொண்டதென அறிய முடிகிறது.

இந்தப்பகுதியில்தான் இந்த மலையின் இக்காலத்து சர்ச்சைக்குரிய தொல்லியல் எச்சங்கள் வெளித்தெரிய ஆரம்பிக்கின்றன. இங்குள்ள மலையின் முகப்புப் பகுதியில் புராதன பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டு அவ் எழுத்துக்கள் மழை மற்றும் வழிந்தோடும் நீரினால் அரிப்பிற்கு உள்ளாகாத வகையில் எழுத்துக்களின் மேற்பகுதியில் மலையைக் குடைந்து சிறு ஆழத்தில் நீரோட வழி செய்யப்பட்டிருக்கிறது. இங்கு வினாயகர், அம்மன், வைரவர் ஆகிய தெய்வங்களுக்கு சிலை வைத்து வழிபடுகின்றார்கள் கிராம மக்கள்.

உன்னிப்பான அவதானத்திற்குரிய மலையின் இந்த முதற்பகுதியைக் கடந்து மேலும் சில பல அடிகள் பயணப்பட மலைத்தொடரின் அடுத்த பகுதி வரவேற்கிறது. மென் சாய்வு கொண்ட இப்பகுதியால் மலையில் மேல் ஏறிச்செல்ல ஒரு அகழி போன்ற சிறிய நீர்த்தடாகம் வரவேற்கிறது. ஒரு மனிதனை மூடக்கூடிய அளவிற்கு நீர் நிறைந்து காணப்படுகின்ற சிறு நீர்த்தடாகத்தில் நீர் வற்றாமல் எப்பொழுதும் நிறைந்திருக்கும் என்கின்கின்றார்கள் கிராம மக்கள். அந்த நீர்த்தடாகத்திற்கு மேலே மலையின் சற்று உயரமான பகுதியில் நாகத்தை பிரதிபலிக்கும் கற்தெய்வ வழிபாடு இடம்பெறுகிறது.



நீர்த்தேக்கத்தில் இருந்து பார்க்கின்ற போது மலைநோக்கிச் செல்லும் இடப்பகுதியின் உயரமான ஓரிடத்தில் மலையோடு தொடர்பற்ற, எங்கிருந்தோ கொண்டுவரப்பட்டு பொருத்தப்பட்டது போன்ற பாரிய கல் ஒன்று சிறு சிறு சதுர வடிவான கற்களை அடித்தளத் தாங்கிகளாக முண்டு கொடுக்கப்பட்டு நிமிர்த்தி வைக்கப்பட்டுள்ளது. புராதன தொழிநுட்பத்தின் இன்னும் ஒரு வடிவத்தை பறைசாற்றுகின்ற இப்பகுதியை கடந்து மலையில் மேல் நோக்கிச் செல்லுகின்ற போது ஒரேசீராக குடையப்பட்ட சிறிய சிறிய குழிகள் தென்படுகின்றன. மருந்துகள் மற்றும் பச்சிலைகளை அரைப்பதற்கான குழிகளாக அவை காணப்பட்டிருக்கலாம் என்கின்ற ஐதீகத்தையும் நம்பிக்கையையும் இக்குழிகளோடு இணைத்துப் பார்க்க இடமிருக்கிறது.

குழிகள் காணப்படுகின்ற அப்பகுதியை கடந்து இன்னும் மேற்சென்று கீழிறங்க மலைத்தொடரில் இயற்கையாகவே அமையப்பெற்ற சிறு குன்றொன்று தென்படுகின்றது. பார்ப்பதற்கு நாகத்தின் தலை போன்று தென்படுகின்ற அந்தக் குன்றில் பாம்பின் முகத்தில் தெரிகின்ற பக்க வளைவுகள் விளிம்புச் சதைகளைப்போன்ற உன்னிப்பான அவதானத்திற்குரிய கற் சிற்ப வேலைப்பாடுகள் செதுக்கப்பட்டுள்ளன. நாக பாம்புகள் அவ்விடத்தில் உலவுவதாகவும் தாங்கள் பிரசாதமாக படைக்கின்ற பாலை அவை குடிப்பதாகவும் நம்புகின்றார்கள் கிராம மக்களும் பக்தர்களும்.

அந்தப்பகுதியில் இருந்து மலையில் செங்குத்தாக இன்னும் மேல் நோக்கிச்செல்ல மலையின் உச்சிப்பகுதிக்குச் செல்வதற்குரிய சிறு சமவெளிப் பகுதி தென்படுகின்றது. இச் சமவெளிப்பகுதிக்கு செல்வதற்காக அலுமினிய வேலைப்பாடுகளுடை படிகளை ஆலய நிர்வாகத்தின் முயற்சியால் அமைத்திருக்கிறார்கள். ஆனால் முழுமையாக அமைப்பதற்கு தொல்லியல் திணைக்களம் அனுமதியை வழங்காத நிலையில் அச் செயற்பாட்டிற்கு எதிராக வழக்கினையும் தொடர்ந்திருக்கிறது திணைக்களம்.

மலையின் சிறு சமவெளிப்பகுதியிலிருந்து அப்பகுதியின் இரம்மியமான வனப்பையும் சூழலையும் அனுபவிக்க முடிகிறது. பின்னர் அங்கிருந்து மலையின் அடுத்த உச்சிக்கு ஏறிச் செல்வதற்கான எவ்விதமான படிகளோ, அமைப்புக்களோ அற்ற நிலையில் இயற்கையாக அமைக்கப்பட்டிருக்கின்ற சிறிய மரக்குற்றியிலான தாங்கிகளையும், பெருங் கொடிகளையும், மரங்களையும் பற்றிக்கொண்டு மேலே ஏற முடிகின்றது. பெரும் பிராயத்தனத்தின் பின் மேல் நோக்கி ஏறிச்செல்ல மலையின் உச்சியில் கற் பாறைகளை அடுக்கி அவற்றின் மேல் அமைக்கப்பட்டிருக்கின்ற புராதன ஆதி இலிங்கேச்சரர் கண்களில் தென்படுகிறார்.



கூம்பு வடிவிலான பாறைய சதுரக் கற்களின்மேல் அடுக்கி ஒட்டி நிமிர்த்தி வைக்கப்பட்டிருப்பது போன்று தென்படுகின்றது மக்களின் நம்பிக்கைக்குரிய ஆதி இலிங்கேச்சரர் சிவலிங்கம். இந்தச் சிவலிங்கம் இராவணன் காலத்திற்குரியதாக இருக்கலாம் என்கின்ற நம்பிக்கைய வெளிப்படுத்துகின்றனர் கிராம மக்கள்.

இயற்கை மூலிகைகள் நிறைந்த அந்தப் பகுதியிலிருந்து இன்னும் சற்று மேல் நோக்கி ஏறிச்செல்ல அந்த மலையின் சமவெளி தென்படுகின்றது. அங்கு சிவலிங்கம் ஒன்றை பிரதிட்டை செய்து வழிபடுகிறார்கள் கிராம மக்கள்.

சுமார் முன்நூறு அடிகளுக்கு மேற்பட்ட மலையுச்சியின் சமவெளியில் ஏறிநிற்க காட்டின் காற்று மேனியைத் தழுவ அங்கிருந்து வன்னிப் பிராந்தியத்தின் அழகை கண்டுகொள்ள முடிகின்றது. ஒரு பக்கம் வவுனியாவின் காட்சிகளும், மறுபக்கம் மதவாச்சியின் காட்சிகளும், இன்னும் ஒரு பக்கம் பதவியா போன்ற பிரதேசங்களும் தென்படுகின்றன என்பது கிராம மக்களின் கணிப்பு.

புவியின் பௌதீகவியல் ரீதியில் இப்படியான மலை உருவாக்கச் செயற்பாட்டிற்கு பல்வேறு காரணிகள் துணை புரிகின்றன. புவியின் உட்பகுதியில் இயங்குகின்ற மேற்காவுகளை ஓட்டங்களின் காரணமாகவும், புவித்தகடுகளின் ஒருங்குதல் செயற்பாட்டின் காரணமாகவும் மலை உருவாக்கச் செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. அந்த வகையில் நெடுங்கேணிப் பிரதேசத்தின் பௌதீக இட அமைவும், இவ் வெடுக்குநாறி மலையின் புவியியற் காரணிகளும் கற்றுணரப்பட வேண்டிய அதே நேரத்திலே கண்ணுக்கு எட்டிய தூரம்வரை பரந்து விரிந்திருக்கின்ற அந்தக் காடுகளும் காட்டு மரங்களும், இந்த மலையும் தேக்கி வைத்திருக்கின்ற தொன்மத்தின் கதைகள் பலவாகும்.



இலங்கையின் குடித்தொகை வரலாற்றில் வன்னிப்பிராந்தியம் காலத்தால் முற்பட்ட வரலாற்றைப் பதிவு செய்கின்றது. இங்கு குளங்களை அடிப்படையாக வைத்து உருவாகிய குடியேற்றத்திட்டங்கள் பெருங்கற்காலத்தின் எச்சங்களையும் அதற்கு முந்திய குறுணிக்கற்கால எச்சங்களையும் பறைசாற்றுபவை என்பது வரலாற்று ஆசிரியர்களின் கருத்தாகும். குளங்களை அச்சொட்டாகக் கொண்ட கிராமங்களும் இன்னும் பூனகரி, மன்னாரின் கட்டுக்கரை மற்றும் தேக்கம் பகுதிகள் வவுனியாவின் செட்டிகுளம் மாமடுவ போன்ற பல பிரதேசங்கள் இவற்றின் எச்சங்களாக எஞ்சி நிற்கின்றன. இங்கு கண்டு கொள்ளப்பட்ட தொல்லியல் எச்சங்கள் இதனை உறுதி செய்கின்றன.

அந்த வகையில் புராதன இலங்கையில் நீர்ப்பாசனத் தொழில்நுட்பத்தை ஆரம்பித்து செயற்படுத்தியவர்கள் நாகர்கள்தான் என்பது சிரான் தெரணியகல உட்பட்ட வரலாற்று ஆய்வாளர்களின் கருத்தாகும். இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் நாகர்கள் வாழ்ந்ததற்கான எச்சங்கள் பரவியிருக்கின்றன. கிழக்கிலங்கையின் படுவான்கரையின் வெல்லாவெளியில் அமைந்திருக்கின்ற பிராமி சாசனங்களும் குடைவரை எச்சங்களும் இவற்றை பலப்படுத்துகின்றன.

இதேபோன்ற பிராமி எழுத்துக்களைக் கொண்ட சாசனம் இந்த வெடுக்குநாறி மலையிலும் பதியப்பட்டுள்ளது. பிராமி எழுத்துக்களை முதன் முதலில் வட இந்தியாவில் அசோகச் சக்கரவர்த்தி பயன்படுத்தினார் என்றும் பிற்காலத்தில் பரப்பப்பட்டு பின்னர் திராவிட மொழிக் குடும்பத்தோடு கலந்த காரணத்தினால் தமிழில் தமிழ் வரி வடிவத்திற்கு ஏற்ப பிராமி எழுத்துக்களை உள்வாங்கி இங்குள்ள மக்கள் பயன் படுத்தினார்கள் என்பதும் மொழியியலாளர்களின் கருத்தாகும்.

ஆக நெடுங்கேணி ஒலுமடுவின் வெடுக்குநாறி மலைப் பிரதேசத்திலுள்ள இந்த பிராமி எழுந்துக்களோடு இணைந்த ஏனைய எச்சங்களும், நாக வழிபாடும், நீர்ப்பாசன அமைப்புக்களும் நாகர்களின் தொன்மத்தின் நீட்சி என்று கருதுவதற்கான வாய்ப்புக்கள் பல உள்ளன. இந்த மலைப்பகுதிக்கு அண்மையில் அமைந்துள்ள நாகர் குளம் என்கின்ற குளப்பகுதி இதனை மேலும் வலுப்படுத்துகின்றது. வட கிழக்கில் பூர்வீரகமாக வாழ்கின்ற தமிழர்கள் நாகர்களின் வழி வந்தவர்கள் என்கின்ற வரலாற்று ஆசிரியர்களின் கூற்றுப்படி இந்த வெடுக்குநாறி மலையின் கதைகள் உலகறியப்பட வேண்டியவை.

ஆனால் தொல்லியல் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இந்த ஆலயப் பகுதியில் பக்தர்கள் வழிபாடுகளை நடாத்துவதற்கும் இயல்பான நடமாட்டத்திற்கும் தடை விதிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதும் இந்த நிலம் கொண்டிருக்கின்ற கதைகளை மாற்றுவதற்கான முயற்சிகளாகும். இங்கு கோயிலிற்கு சென்று வருவதற்கென அமைக்கப்பட்டிருக்கின்ற ஒரு பகுதிக்கான படிகள் தவிர ஏனைய பகுதிகளுக்கான படிகளை அமைப்பதற்கு தொல்லியல் திணைக்களம் தடைவித்துள்ளது. அதே நேரத்திலே இந்த ஆலயப்பகுதிக்குச் செல்வதற்கான சுமார் நான்கு கிலோமீற்றர்கள் தூரமுள்ள மண் பாதையில் உரிய முறையில் பாதைகளை அமைப்பதற்கு முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினரின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிதி குறித்தொதுக்கப்பட்டிருக்கின்ற நிலையில் வன வளபாதுகாப்புத் திணைக்களம் அதற்கான அனுமதியை தடுத்து நிறுத்தி வைத்திருக்கின்றது. குறித்த அனுமதியைப் பெறுவதற்காக பல தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் முயற்சிகளை மேற்கொண்ட போதும் அனுமதி இன்னமும் கிடைக்கப்பெறவில்லை. இவற்றிற்கான விளக்கக் கடிதங்கள் முழுமையான சிங்கள மொழியில் ஆலய நிர்வாக சபைக்கு அனுப்பப் பட்டுள்ளது. தமிழும் சிங்களமும் ஆங்கிலமும் இந்த நாட்டின் அரச கரும மொழிகள் என்கின்ற நிலையில் மக்களுக்காக, மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய வகையிலேயே அரச திணைக்களங்கள் சேவையாற்ற வேண்டும்.

இந்த ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவத்தை நடாத்தக்கூடாது என்று தொல்லியல் திணைக்களம் தனிச் சிங்களத்தில் கடிதத்தை அனுப்பி பொலிசார் தடுத்து, பின்னர் நீதி மன்ற அனுமதியில் பொங்கல் நிகழ்வுகள் நடைபெற உள்ளதாகத் தெரிவிக்கின்றார்கள் ஆலய நிர்வாகத்தினர்.



தொல்லியல் சின்னங்கள் முறையாகப்பராமரிக்கப் பட வேண்டிய அதே நேரத்திலே, வனங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமில்லை, ஆனால் இலங்கையின் புராதன சின்னங்களில் ஒன்றாகிய சிகிரிய சிங்க மலைத்தொடரில் உரிய முறையில் படிகள் அமைக்கப்பட்டு சுற்றுலாப் பயணிகள் சென்று வரமுடியும் எனில் வெடுக்குநாறி மலையில் படிகள் அமைத்து மக்கள் வழிபாடு செய்வதில் உள்ள தடைகள் என்ன?

பாதுகாக்கப்பட்ட உலக வனங்களில் ஒன்றாகிய சிங்கராஜ வனப்பகுதிக்கு மக்கள் செல்வதற்காக காட்டின் மக்கள் நடமாட்டம் உள்ள முதலாவது வலயப் பகுதிவரை கற்பாதைகள் அமைத்து சென்றுவர முடியும் எனில் அதே போன்று வனத்தினை பாதிக்காத வகையில் கற்பாதைகளை அமைத்து பயணிகள் மற்றும் பக்தர்கள் உரிய முறையில் நடந்து சென்று வழிபாடுகளை நடாந்தி வருகின்ற வகையில் வெடுக்குநாறி மலைக்குச் செல்லும் பாதையில் உரிய கற் பாதைகளை அமைப்பதற்கேனும் வனவளத் திணைக்களம் அனுமதியை வழங்குவதில் உள்ள தடைகள் என்ன?

இந்த ஆலயத்தின் தொன்மத்தை அறிந்த வெளியிடத்து மக்கள் கிராமத்திற்குச் சென்று ஆலயத்தைத் தேடி வழிபடச் செல்கின்றபோது இனம் தெரியாதோரால் கேள்விகளுக்கு உள்ளாக்கப்படுவதன் பின்னுள்ள கதைகள்தான் என்ன?? இவைதான் கிராம மக்களின் விடையற்ற வினாக்களாக உள்ளன.



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
416-332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 913



## செட்டிபாளையம் சோமநாதலிங்கேஸ்வரர் சோமகலாநாயகி கோயில்

### - மட்டக்களப்பு -

செட்டிபாளையம் சோமநாதலிங்கேஸ்வரர் சோமகலாநாயகி கோயில் கருவறையிலே எழுந்தருளியுள்ள சிவலிங்கம், நுட்பமான வேலைப்பாடுகளும், பூரணமான அழகிய உருவ அமைப்பும் கொண்டதாகக் காணப்படுகின்றது. இரண்டாம் மண்டபத்திலே சொமகலாநாயகியின் திருவுருவமம், விநாயகர் திருவுருவமும் காணப்படுகின்றது. இவற்றொடு சண்டேசுவரர், நந்தி ஆகியவையும் அமைக்கப்பட்டுள்ளன.

இக்கோயில் தெற்கு வாயிலைக் கொண்டுள்ளது. இங்கு எழுந்தருளியுள்ள அம்பாளும் தெற்கு நோக்கிய பார்வையிலேயே எழுந்தருளியுள்ளார். வெளியே வைரவர் ஆலயம் காணப்படுகின்றது. ஆலயத்திற்குரிய தீர்த்தக்கிணறு, மடைப்பள்ளி என்பனவும் அமைக்கப்பட்டுள்ளன. வீதியைச்சுற்றி நிழல்தரு மரங்கள் பலவும் நடப்பட்டுள்ளன. இவற்றுள் வில்வமரங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. இக்கொயிலின் மேற்குப்புறமும், தெற்குப்புறமும் பாதைகளை எல்லைகளாகக் கொண்டுள்ளன. கிழக்கிலும், வடக்கிலும் மக்கள் குடியிருப்புகளாகக் காணப்படுகின்றன.

இக்கோயிலின் வளர்ச்சி ஸ்ரீலஸ்ரீ சோமேஸ்லரானந்தகிரி சுவாமிகளோடு பெரிதும் தொடர்புபட்டுள்ளது. இந்தியாவைச் சேர்ந்த இச்சுவாமி 1940 ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து அழகும், அருளும் கொண்ட சிவலிங்கத்தைத் தருவித்தார். ஆரம்பத்திலே இச்சிவலிங்கம் ஓலையினால் வேய்ந்த கோயிலில் வைத்துப் பூசிக்கப்படடு வந்தது. இச்சிவலிங்கமே இக்கோயில் கருவறையில் எழுந்தருளியுள்ள மூர்த்தியாக விளங்குகின்றது.

ஓலைக்குடிசையில் எழுந்தருளியிருந்த சிவனை கற்கோயிலில் எழந்தருளச் செய்ய வெண்டும் என்பது சுவாமிகளின் பேராவலாகக் காணப்பட்டது. ஆயினும் வருமானம் தரக்கூடிய எவ்வசதியும் இக்கோயிலுக்கு இருக்கவில்லை. இதே எண்ணங்கொண்ட பக்தர்களும் இதனைப் பல்வேறு வழிகளில் செயல்படுத்த முனைந்தனர்.

ஆலய வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு சுவாமிகளினால் ஏற்படுத்தப்பட்ட "திருவருள் வாலிபர் சங்கம்", "திருவருள் மாதர் சங்கம்" என்பன அளித்த மாதாந்த சந்தாப்பணம், மற்றும் மாதர் சங்க உறுப்பினர்கள் தமது வீடுகளிலே சமைக்கும்போது ஒவ்வொரு பிடியரிசியாகச் சேமித்து அவற்றை செவ்வாய்க்கிழமைகளில் ஆலயத்திலேசேர்த்து, நியாயவிலைக்குவிற்று பணம் சேகரித்தனர். இப்பணமும் சிறுதுளி பெருவெள்ளம் என்பது போல பெருகியது.

சுவாமிகளின் ஆலோசனப்படி செயற்பட்ட பக்தர்களதும், மன்ற உறுப்பினர்களதும் அயராத முயற்சியினாலும், சுவாமிகளின் அருளாசியினாலும், யாவற்றிற்கும் மேலாக இறைவன் திருக்கடாட்சத்தினாலும் கற்கோயில் கட்டும்பணி நிறைவேறியது. 1981 ஆம் ஆண்டு செட்டிபாளையம் சோமநாதலிங்கேஸ்வரருக்கு அழகிய கற்கோயில் எழுப்பப்பட்டது. இக்கடடிட வேலைகள் அனைத்தும் சிரமதான அடிப்படையிலேயே செய்து முடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு கட்டி முடிக்கப்பட்ட ஆலயத்திற்கு கும்பாபிஷேகப் பெருவிழா நடத்த முடிவெடுக்கப்பட்டது. அத்தோடு ஆயிரம் நாமம் கொண்ட தெய்வத்திற்கு ஒரு திருநாமம் சூட்ட வேண்டும் எனவும் விரும்பினர். தெற்கு வாயில் கோயில் அருமையாகவே காணப்படுவதுண்டு செட்டிபாளையம் சிவன்கோயிலும் தெற்குவாயிலாகக் காணப்பட்டது. இநியாவிலே கடலருகில் பத்திரகிரி என்னும் இடத்தில், சிவன்கோயில் ஒன்று தெற்கு வாயில் கோயிலாகக் காணப்படுகின்றது.

தெற்குவாயில் கொண்ட பத்திரகிரியில் எழுந்தருளியுள்ள சிவனுக்கு சோமநாதர் என்னும் திருநாமம் வழங்கப்பட்டது. செட்டிபாளையம் ஆலயம் அமைவதற்குக் காரணமாயிருந்த சுவாமியினுடைய பெரும் சோமேஸ்வரானந்தகிரி எனக் காணப்பட்டதால் அவருடைய ஞாபகார்த்தமாகவும் செட்டிபாளையத்தில் எழுந்தருளச் செய்த சிவனுக்கு சோமநாதர் என்ற திருநாமத்தையும், அன்னைக்கு நொமகலாநாயகி என்ற திருப்பெயரையும் சூட்டினர்.

இறைவனுடைய பெயர்களை மக்களுக்குச் சூட்டி மகிழ்வது தொன்று தொட்டுக் காணப்படும் பெரு வழக்காயுள்ளது. இந்நிலையில் சற்று மாற்றத்தை ஏற்படுத்தி ஆலயத்தொண்டு புரிந்ததோடு, ஆலய தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் அரும்பாடுபட்ட சுவாமியின் பெயரை இறைவன் திருநாமத்தோடு இணைக்கவேண்டும் என்ற மக்களின் எண்ணம் போற்றத்தக்கது.

*தொடரும்...*

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி,
நீரிழிவு நோய், வயிற்றுவலி,
மாதவிடாய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9




TORONTO ASTROLOGER & PSYCHIC

Pandit: ARJUN

9 TIMES MORE POWERFUL THAN OTHER ASTROLOGERS



VEDIC SOLUTIONS AVAILABLE FOR:

* Health * Education * Family * Job
* Marriage * Divorce * Love * Childless
* Business * Promotion * Husband-Wife Couples
* Lucky Numbers * Court Etc

REMOVES BLACK MAGIC & EVIL SPIRITS & GIVES 100% PROTECTION

No Person in the World is Without Problems. Meet the Pandit once and see your Future Changing for GOLDEN & BRIGHT FUTURE

100% Guarantee

He can perform Devi upasana Lakshmi Pooja Shanthi Pooja (Prayers) and all so protection from enemies and jealousy

PRIVATE & CONFIDENTIAL

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் **Pandit: Arjun** சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, ஜாதகம், முக நாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை இவரைச் சந்தியுங்கள்..!

கண்ணூறு, நாவூறுக்கு வெள்ளிக்கிழமைகளில் இலவசமாக நூல் கட்டப்படும்



- கைரேகை
- நாம சட்சத்திரம்
- கல்வி, உத்தியோகம்
- தொழில், வியாபாரம்
- இலட்சுமி வசீகரம்
- வதிவிடப் பிரச்சனைகள்
- வெளிநாட்டுப் பயணங்கள்
- பெண்பிள்ளைகள் - பெற்றார் பிரச்சனைகள்
- நீதிமன்ற வழக்குகள்
- திருமண யோகம்
- குழந்தைப் பாக்கியம்
- சர்ப்ப தோஷம்
- கர்ப்பதோஷம்
- கஸ்ட - நஸ்டங்கள்
- வாகனப் பொருத்தம்
- ஒன்று கூடுதல்

அகோரா சாமியாகளடம சென்று மந்துரங்கள கற்று கொண்ட ஓம பரகாஷ

2607 Eglinton Ave East, Scarborough ON, M1K 2S2
UPSTAIRS ERA SUPERMARKET , (BRIMLEY & EGLINTON)

Call: 416-722-9498

- மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்

# சிவாஜியும் கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

#13



"கலைஞானம், உலகத்திலேயே சிறந்த நடிகன் ஒரே ஒருவன் தான்! அவன் பெயர் சிவாஜி கணேசன், போ...! நான் சொன்னதாகச் சொல்!" இப்படி உரிமையோடு உரத்துச் சொன்னவர் யார் தெரியுமா? அவர் தான் மக்கள் திலகம் எம்ஜிஆர்.

அப்போது கலைஞானம், தமிழ்நாட்டின் முதலமைச்சராகவிருந்த எம்.ஜி.ஆர் அவர்களுக்கு விசேட காட்சியாக நடிகர் திலகம் நடித்த "மிருதங்க சக்கரவர்த்தி" திரைப்படத்தை போட்டு காண்பித்தார் பழம்பெரும் நாடகக் கலைஞரும் புகழ்பெற்ற பாடலாசிரியருமான கே.பி காமாட்சி அவர்களின் ஒன்று விட்ட சகோதரருமான பாலகிரு‘ணன் என்ற இயற்பெயர் கொண்டவர் தான் இந்தக் கலைஞானம் அவர்கள்.

"ராஜரிஷி" "மிருதங்க சக்கரவர்த்தி" ஆகிய சிவாஜி படங்களை தயாரித்தவர். ரஜினி - கமல் - சிவகுமார் - ஜெய்சங்கர் என பல நட்சத்திரங்களின் கதாசிரியர், தயாரிப்பாளர், இளம் வயதிலேயே பல்வேறு நாடகக் கம்பெனிகளில் சிறு சிறு பாத்திரங்களில் நடித்து பயிற்சி பெற்றவர். பள்ளிப்படிப்பில் நாட்டம் இன்றி சுற்றித் திரிந்தவர். ஐயா சி பா ஆதித்தனாரின் "தினத்தந்தி"யில் வரும் பெரிய எழுத்து செய்திகளை எழுத்துக்கூட்டி வாசித்தே, படிக்கும் ஆற்றலை வளர்த்துக் கொண்ட கலைஞானம் அவர்கள் நாடக திரையுலகில் பல்வேறு சோதனைகளையும் கடந்து தயாரிப்பாளரானவர். மிகச்சிறந்த கதை சொல்லியுமாவார். மக்கள் திலகம் எம்ஜிஆர் அவர்கள், நாடக உலகிலும் திரையுலகிலும் சிறு சிறு வேடங்கள் ஏற்று வளர்ந்து கொண்டிருந்த காலத்திலேயே எம்ஜிஆர் அவர்களுக்கு நன்கு அறிமுகமானவர் கலைஞானம். மிருதங்கக் கலைஞர் சுப்பையா பிள்ளையின் வாழ்க்கையை மையப்படுத்தி தான் தயாரித்த (1983) "மிருதங்க சக்கரவர்த்தி"யில் மீண்டும் சுப்பையா பிள்ளையை நடிகர் திலகம் மூலம் கௌரவப்படுத்திய தனது கலை முயற்சியை மக்கள் திலகம் அவர்களை அழைத்துக் காண்பித்தார்.

"மிருதங்க சக்கரவர்த்தி" இல் இறுதிக் காட்சியில் சுமார் 15 நிமிடங்கள் மிருதங்க சக்கரவர்த்தி ஆகவே வாழ்ந்து காட்டியிருப்பார் சிவாஜி. சிவாஜி அவர்களது விரல்கள் விளையாடும் காட்சியை கண் கொட்டாது பார்த்து ரசித்த எம்ஜிஆர் அவர்கள் படம் முடிந்த பின்பும் ஆடாது அசையாது கன்னத்தில் கைவைத்தபடி வெள்ளி திரையையே வெறித்து நோக்கியபடி இருந்ததைக் கண்ட அவரது மனைவியார் ஜானகி அம்மா, அவரை சுய நினைவுக்கு கொண்டு வந்தார். இருக்கையை விட்டு எழும்பிய முதல்வர் எம்ஜிஆர் கலைஞானத்தை பார்த்து கூறிய வார்த்தைகள் "கலைஞானம், நான் சொன்னதாகச் சொல்.. உலகில் சிறந்த ஒரே ஒரு நடிகன் தம்பி சிவாஜிகணேசன் தான் என்று!"

திரையுலகில் இரு தசாப்தங்களுக்கு மேலாக தொழில் ரீதியில் எதிரும் புதிருமாக வலம் வந்தவர்கள் தான் சிவாஜியும் எம்ஜிஆரும். ஆனால் தம்பி சிவாஜிக்கு கொடுக்க வேண்டிய முதல் மரியாதையை முழுமனதோடு செய்தவர் எம்ஜிஆர் அவர்கள். எம்ஜிஆர் அவர்கள் முதல்வராக இருந்த காலத்தில் வெளிநாட்டில் இருந்து வருகைதரும் அரச விருந்தினர்களுக்கும் கலை குழுக்களுக்கும் தமிழர்களுடைய பண்பாடு கலை இசை வடிவங்களை உணர்த்தும் வகையில் காட்டுவதற்கு எம்ஜிஆர் உத்தரவிடுவது தம்பி கணேசனின் "தில்லானா மோகனாம்பாள்" படம் என்பது பலருக்கு தெரியாத சங்கதியாகும்!



நடிகர் திலகம் அவர்கள் பல்வேறு திரைப்படங்களில் பேசிய வசனங்களை கேட்டு தமிழ் மொழியின்பால் மயக்கம் கொண்டவர்களில் நானும் ஒருவன். அது மாத்திரமல்ல அவர் பேசி நடித்தால் எப்படி இருக்கும் என சிந்தித்து கற்பனை உரையாடல்களை அவருக்காகவே எழுதிப் பழகியவன் நான். இத்தகைய முயற்சிக்கு எனக்கு துரோணாச்சாரியாராக விளங்கியவர்கள் கலைஞரும், கவியரசு கண்ணதாசனுமாவார்கள். கலைஞர் அருட்செல்வர் ஏபி நாகராஜனையும் எனக்கு மிகவும் பிடிக்கும். இங்கு இன்னுமொரு கதை வசனகர்த்தாவை நினைவூட்ட விரும்புகிறேன். அவர்தான் மதிப்புக்குரிய காலஞ்சென்ற பெரியவர் முரசொலி மாறன். மாறன் அவர்கள் திமுக தலைவர்களில் ஒருவர். கலைஞர் மு கவின் அக்கா வயிற்றுப் பிள்ளை மருமகனுமாவார். திமுகவின் பல முக்கிய பொறுப்புகளை வகித்தவர். மத்திய அமைச்சராக பணியாற்றி புகழ் படைத்தவர். இவரும் "அன்னையின் ஆணை" (1958) "அன்பு எங்கே" (1958) "குலதெய்வம்" (1956) "தலை கொடுத்தான் தம்பி" (1959) "சகோதரி" (1959) போன்ற பல படங்களுக்கு உரையாடல் எழுதிப் புகழ்பெற்ற கதாசிரியருமாவார். திரு. கலாநிதி மாறன், தயாநிதி மாறன் ஆகியோரின் தந்தையான மாறன் அவர்களை (1995) நானும் சில மணி நேரம் சந்தித்து உரையாடும் வாய்ப்பு கிடைத்தது. நான் அவருடன் சினிமா பற்றி பேசவில்லை அவர் என்னுடன் தமிழ் ஈழ அரசியல் மட்டும் ஆவேசமாக பேசினார். நான் செவிமடுத்து மௌனியாகவிருந்தேன். அது பற்றி இங்கு விரிவாக எழுத விரும்பவில்லை.

அவர் எழுதிய அன்னையின் ஆணை திரைப்படத்தில் சிவாஜி அவர்களுக்கு நடிப்பு தீனி போடுவதற்காக "சாம்ராட் அசோகன்" எனும் ஓரங்க நாடக சித்திரம் தீட்டியிருந்தார். அந்நாடகத்தில் அசோகன் பேசுவதாக எழுதிய காட்சியையும் (சுருக்கமாக) அவரது பாதிப்பால் நான் சிவாஜி அவர்களை அசோகனாக நினைத்து "ராஜ தண்டனை" எனும் நாடகத்தை எழுதிய காட்சிகளில் ஒன்றையும் உங்களுக்கு காட்சிப் படுத்த விரும்புகிறேன். என்னால் எழுதப்பெற்ற "ராஜ தண்டனை" ரொரன்ரோ திரு. கோணேஷ் அவர்களின் ஐ ரி பி சி வானொலியில் கவிஞர் அ. கந்தசாமி அவர்களின் நெறியாள்கையில் பலமுறை ஒலிபரப்பானது. முதலில் அமரர் முரசொலி மாறன் எழுதிய காட்சி இதோ... (போர் வெறி கொண்ட அசோகன் புத்தபிட்சு ஒருவரின் நற்போதனையால் மனம் தெளிந்து போர்க் குணத்தை விட்டொழித்து புத்த நெறியை கைக்கொள்கிறான்)

அசோகன்: அன்புதான் இன்ப ஊற்று! அன்புதான் உலக ஜோதி! அன்பு தான் உலக மகா சக்தி! ஆம்! என் கண்கள் திறந்தன. பூட்டிய சிந்தனை கூட்டின்

(தொடர்ச்சி ௨0ம் பக்கம்)

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

## நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

## நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# இவ்வார ராசிபலன்

**18-09-2020 வெள்ளி தொடக்கம் 24-09-2020 வியாழன் வரையும்**




**மேஷம்:** மாணவர்களுக்கு மனஉறுதியும் மீனவர்களுக்கு பணவரவும் கிடைக்கக்கூடிய பாக்கியமான வாரம். புது முயற்சிகள் பலன் அளிக்கும். பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். ஏற்றம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். பாலிய நண்பர் சந்திப்பு கிட்டும். பொருளாதாரம் மேம்படும். பேச்சில் கவனம் தேவை. கடன் பாக்கிகள் வசூலாகும். வாகன யோகமுண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிகாரம் குவியும். சகோதர வழியில் கவனம் தேவை.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ ராஜவிநாயகர், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S




**ரிஷபம்:** கோபத்தையும், வேகத்தையும் தவிர்த்து லாபத்தைச் சேர்க்கக்கூடிய நல்ல வாரம். கடன் சுமை குறையும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பணநடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப் பயணம் இனிக்கும். அணிமணிகள் சேரும். பெண்களுக்கு யோகம் கூடும். பணப்புழக்கம் சரளமாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: நந்தாதேவி, அதிர்ஷ்ட எண்: 4,2,1,0
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**மிதுனம்:** சவாலான விஷயங்களை சமாளித்து சாதனை நிகழ்த்தக்கூடிய போதனையான வாரம். சுப காரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். தென்றல் வீசும். எதிர்ப்புகள் விலகும். நோய் அகலும். பெயர், புகழ், கௌரவம், செல்வாக்கு உயரும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும்.
வழிபட வேண்டிய தெய்வம்: புட்டுச் சொக்கநாதார், அதிர்ஷ்ட எண்: 5,1,5,0
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J




**கடகம்:** கசந்த காலங்கள் விலகி வசந்த காலங்கள் உருவாகக் கூடிய வலிமையான வாரம். பழைய பகை மாறும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பிள்ளைகளால் பெருமை கூடும். புது முயற்சிகள் தள்ளி வைக்கவும். தனவரவுகள் தடைப்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். உற்சாகம் அதிகரிக்கும். திடீர் செலவு ஏற்படும். மங்கல செய்தியால் மனம் மகிழும்.
வழிபட வேண்டிய தெய்வம்: வெக்காளியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,3,2,7
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள: S,R




**சிம்மம்:** இல்வாழ்க்கை நல்வாழ்க்கையாய் அமையக் கூடிய நல்ல வாரம். ஆடம்பர செலவு அதிகரிக்கும். மாற்று இன நட்பு பெருகும். வயிற்று உபாதை வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிவிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். ஆனந்தம் குடிக்கொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும்.பேச்சில் கணிவு தேவை. களவுப் போன பொருள் திரும்ப கிடைக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: திருமலைராயர், அதிர்ஷ்ட எண்: 3,2,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,V





**கன்னி:** நாற்காலி கனவுகள் நனவாகக் கூடிய நல்ல வாரம். இடமாற்றம் நன்மைத் தரும். குடும்ப அன்யோன்யம் பலப்படும். உத்தியோக உயர்வு கிட்டும். பூமி வாங்கும் யோகம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். உடன் பிறப்புகளால் உதவி கிட்டும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். மேன்மையான நாள். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஆதி விநாயகர், அதிர்ஷ்ட எண்: 7,1,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,F




**துலாம்:** பரபரப்பே இல்லாமல் பணவரவு பெருகக்கூடிய பக்குவமான வாரம். பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். உற்சாகம் கலை கட்டும். உறவினர் வருகை உண்டு. ஆறுதலான சூழ்நிலை அமையும். பணியில் உயர்வு கிட்டும். கஷ்டகாலம் மறையும். பணிவும், துணிவும் கூடும். விவேகமான வாரம். வெளியூர் பயணம் வெற்றி தரும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஹாரஹரசுதன், அதிர்ஷ்ட எண்: 9,7,1,0
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,Q




**விருச்சிகம்:** உழைப்பால் மதிப்பும் உங்களால் சிறப்பும் சேரக்கூடிய பொறுப்பான வாரம். வாகன மாற்றம் உண்டாகும். மன அமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை கூடும். எதிரிகளின் தொல்லை குறையும். தொட்டது துலங்கும் நாள். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சக்தி பாலகன், அதிர்ஷ்ட எண்: 5
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,M




**தனுசு:** இதயத்தில் உற்சாகமும், இல்லத்தில் சந்தோஷமும் இனிமையாய் மலரக்கூடிய அற்புதமான வாரம். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் களவுப் போகும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். உறவினர் வருகை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சந்தான லட்சுமி கணபதி, அதிர்ஷ்ட எண்: 4,1,7,8
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,J




**மகரம்:** கைமேல் காசும், கௌரவ வாய்ப்பும் கிடைக்கக்கூடிய அற்புதமான வாரம். எலக்ட்ரிக்கல் தொழில் லாபம் தரும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பெயர், புகழ் கௌரவம் செல்வாக்கு உயரும். பொதுப் பணிகளில் ஆர்வம் ஏற்படும். திருமணத் தடைகள் நீங்கும். புதுத் தொழிலை துவங்கும் வாய்ப்பு உள்ளது. வெளியூர் பயணம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். எண்ணிய காரியம் கை கூடும். புண்ணியஸ்தலம் செல்வீர்கள்.
வழிபட வேண்டிய தெய்வம்: மணகுழ பகவதி அம்மன், அதிர்ஷ்ட எண்: 9,4,0,7
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,R




**கும்பம்:** ஆதாயம் மிகுதியாகி ஆதாரம் வலுவடையக் கூடிய அற்புதமான வாரம். இனிப்பான செய்திகள் வரும். பழிச் சொல்லிலிருந்து விடுபடுவீர்கள். சொத்துப் பிரச்சனைகள் தீரும். பணியாட்களால் தொல்லை மாறும். கல்வியில் மந்த நிலை மாறும். ஜவுளித் தொழில் உயர்வு தரும். கலைத் தொழில் திருப்பம் வரும். அலுவலகங்களில் பாராட்டு குவியும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மற்றவரின் தொல்லைக் குறையும். பிரிந்து குடும்பம் ஒன்று சேரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: தாய் மூகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 1,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,U




**மீனம்:** பொல்லாத காலங்கள் சொல்லாமல் விலகக்கூடிய அற்புதமான வாரம். மனம் மகிழும் நாள். உழைப்பிற்கான பலனை பெறுவீர்கள். திறமைகள் அதிகமாகும். இன்னல்கள் அகலும். கடன் தீரும். ஆக்கம் அதிகரிக்கும். பழைய பாக்கி வசூலாகும். வியாபாரத்தில் கவனம் தேவை. தனவரவில் தடங்கல் உண்டு. புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். பழைய நட்பு பலன் தரும். உறவினரால் பாதகம் உண்டு. உடல் நலனில் அக்கறை தேவை. உலோகத் தொழில் உயர்வு தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சிங்கப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377


## சிவாஜியும் கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

(19ம் பக்கத் தொடர்ச்சி)

இரும்புக் கதவுகள் உடைந்தன. நீ அருள் பெற்றாய்! மருள் துடைத்தாய்! ஐயோ... இந்த அநாகரிக மனிதப் பதரின் அற்ப ஆசையால்... வெற்றி பித்தத்தால் நூறு ஆயிரம் பேர் உயிரை தத்தம் செய்திருக்கின்றனரே! 150 ஆயிரம் பேர் கையிழந்து... காலிழந்து... கண்ணிழந்து.. மெய்யெல்லாம் புண்ணாகி புலம்பித் தவிக்கின்றனரே! என் செய்வேன்?

இந்தப் பாபத்தைக் கழுவுவதற்கு கங்கை நீரும் களங்கப்பட்டு விடுமே! இத்தனைக்கும் காரணம்! இந்த வாள்! வில்! வேல்! ஆகா இந்த கொலை கருவியினால் எத்தனை ஆயிரம் உயிர்களை கிள்ளி எறிந்திருக்கின்றேன். இந்த வில்லினால் எத்தனை இளம் இதயங்களை வகிர்ந்திருக்கிறேன். ஐயோ கொடுமை .இனிமேல் இந்த நிலை நீடிப்பது மடமையிலும் மடமை! ஆமாம்! அக்ரோணி கணக்கில் எதிரிகள் வந்து குவிந்தாலும் தொகை தொகையாய் அவர்களை எதிர் நிறுத்தி ஒரே வீச்சில் வெட்டி வீழ்த்திய என் வீர வாளே! இனி ஒழிந்து போ!... என் ஆவிகாக்கப் பயன்பட்ட வீரக் கவசமே.. இனி ஓடிப்போ.. என் உடலை விட்டு!.. குபுகுபுவென குருதி கொட்டி குள்ளநரி குணம் கொண்டோரை குப்புற வீழ்த்தி வீரத்திற்கு விளம்பரமாக நின்ற வீரர்களே! மறைந்து போங்கள் என் மார்பை விட்டு! இனிமேல் இந்த அசோகன் மாறிவிட்டான்! தலைகீழாக மாறி விட்டான்! ஏ! கலிங்கமே! தென்னகத்தின் வாயில் புறமே. இன்று முதல் எனக்கு பொன் வேண்டாம்! இன்று முதல் நான் உருவத்தில் சக்கரவர்த்தி உள்ளத்தில் பிட்சமூர்த்தி! போதி மரத்து புத்தனே! புத்துலகச் சித்தனே நீதான் வேண்டும்! உன் அன்புதான் வேண்டும்! என்னை ஏற்றுக்கொள்! ஏற்றுக்கொள்..! இதோ எனது "ராஜ தண்டனை"யில் அசோகன் பேசியது சிவாஜி அவர்களை நாயகனாக நினைத்து தீட்டிய வரிகள்.

அசோகன்: போதும்! போதும்! நிறுத்தும்! போர்.. போர் என்று யுத்த வெறி கொண்டு என் புத்தியை தடுமாற வைத்து விட்டேனா! ஐயகோ கலிங்க பூமியை கண்ணீர் கடலில் மூழ்கடித்து விட்டேனே! கதறி அழும் குழந்தைகள்.. கண்ணீர் விட்டழும் பெண்கள்... கணவனை இழந்த காரிகைகள்.. என்னை மன்னிப்பார்களா? மண்ணாசை கொண்டு மனித உயிர்களைப் பறித்த பாவி நான்! கபால ஓடுகளை கட்டியாளும் கபோதி ஆகி விட்டேனே! கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரமா? விடுதலை வேண்டும் சுதந்திரம் வேண்டும் என்று சூளுரைத்துக் கலிங்க பூமியை சுடுகாடாக்கிப் பார்த்ததில் என்ன நிம்மதியை கண்டேன்! மக்களை இழந்த மண்ணில் மன்னனுக்கு என்ன வேலை? ஆயிரம் லட்சம் என்று என்னால் அழிக்கப்பட்ட மக்களை அன்பு என்ற பாசக் கயிற்றினால் பிணைத்து உயிர் வாழ வைக்க வேண்டிய உன்னத காரியத்தை செய்யத் தவறிய நான் சக்கரவர்த்தி அல்ல! நான் சண்டாளன்! என் சாம்ராஜ்யம் சரிந்த சாம்ராஜ்யம்! புத்த பிக்குவே! மக்களைக் கொன்று குவித்த பாவிக்கு என்ன தண்டனை? நீரே சொல்லும்! எனக்கு நான் என்ன தண்டனை கொடுக்க வேண்டும்! மண்ணாசை கொண்டு மனிதத்தை புறக்கணித்த பாவிக்கு தண்டனை கொடுங்கள் துறவியே தண்டனை கொடுங்கள்! புத்த துறவியே என் சித்தம் திசை மாறுகிறது! சிலந்தி வலையில் மாட்டி விட்ட என் சிந்தனை தெளிவு பெறுகிறது! இன்றுமுதல் அசோகன் சத்திரியன் அல்ல! சன்னியாசி! அறத்தையும் அன்பையும் நேசிக்க போகும் புதிய மனிதன்! போதி மரத்து பூசனை செய்து புண்ணியம் சேர்ப்பவன்! அசோக தர்ம அறத்தின் வழியில் செல்லட்டும். பூபாளம் பாடும் புதிய சக்கரமாக சுழலட்டும்! எனது பராக்கிரமம் மக்கள் மனதில் பாலை வார்க்கட்டும்! செங்குருதியைச் சுவைப்பார்த்து தீட்டிய வாளே விலகிப்போ என்னை விட்டு! போர் வெறி பிடித்த பொல்லாத கத்தியே புறப்படு என் உறையை விட்டு? போதி மரத்து புத்த பகவானே! பொல்லாத காரியங்கள் செய்த என்னை புனிதனாக்கு...! புனிதனாக்கு...!

சிவாஜியை வாசிப்பதன் மூலம் நீங்களும் நல்ல ரசிகன் ஆகலாம். நல்ல தமிழ் எழுதி பழகலாம். என்னருமைத் தமிழ் சாதியே வாசியுங்கள்! நேசியுங்கள்! மேலும் பல்சுவை காட்சிகள் விரியும்...

# உலகத் தமிழர்களை இணைப்பதற்காக கனடா உதயன் பத்திரிகையோடு இணைந்துள்ள மூன்று உலகளாவிய இணையத்தளங்கள்

உலகத் தமிழர்களை இணைப்பதற்காக கனடாவில் கடந்த 25 வருடங்களாக வெளிவரும் உதயன் பத்திரிகையோடு இணைந்துள்ள மூன்று உலகளாவிய இணையத்தளங்கள் கூட்டாக விடுக்கும் அறிவித்தல் இங்கு காணப்படுகின்றது.

மேற்படி இணையத்தளத்தின் விலாசங்கள்: http://www.uthyaannews.ca http://www.nanban.ca http://www.voiceofilankai.lk


## அறிவித்தல்களை உலகெங்கும் உடனுக்குடன் உங்கள் உறவுகளுக்கு கொண்டு செல்ல வேண்டுமா?

uthayannews.ca



- 25 ஆண்டுகளாக கனடாவில் வெள்ளிக்கிழமை தோறும் வெளிவரும் எமது 'உதயன்' பத்திரிகையின் uthayannews.ca என்னும் புதிய இணையதளத்தில் உங்கள் அறிவித்தல்கள், மற்றும் விளம்பரங்களை பிரசுரிக்க நாம் ஏற்பாடு செய்துள்ளோம்.
- நீங்கள் வழங்கும் அறிவித்தல்கள் மற்றும் நினைவஞ்சலிகள் அனைத்தும் கனடா உதயன் பத்திரிகையிலும் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். அத்துடன் எமது சகோதர இணையதளங்களான 'நண்பன்' nanban.ca மற்றும் voiceofilankai.lk இணையதளங்களிலும் பிரசுரம் செய்யப்படும்.
- மிகக் குறைந்த கட்டண விபரங்களை எமது இணையதளங்கள் மற்றும் பத்திரிகை ஆகியவற்றைப் பார்த்து அறிந்து கொள்ளுங்கள் அல்லது மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளுங்கள்.

குறிப்பு:- சென்னை, கொழும்பு, யாழ்ப்பாணம், கனடா ஆகிய இடங்களில் எங்கள் அலுவலகங்கள் இயங்க ஆரம்பித்துள்ளன. எமது கிளை அலுவலங்களில் 24 மணி நேரமும் உங்கள் அழைப்புகளுக்கு பதிலளிக்க, எங்கள் பிரதிநிதிகள் பணியாற்றுகின்றனர்.

மேலதிக விபரங்களுக்கு:-
கனடா +1 416 587 0552
கொழும்பு +94 777 555 026
யாழ்ப்பாணம் +94 766 143 074
சென்னை +91 7845 00 6977

E-mail :- uthayannews@yahoo.com | uthayannews.chennai@yahoo.com
Web :- uthayannews.ca | nanban.ca | voiceofilankai.lk



## PRECONSTRUCTION CONDOS & TOWNHOUSES!






Bala Logendralingam
REALTOR®
EXECUTIVE Award
100% Award

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Office: 416-287-2222

647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9

# அன்பின் தொனி - 578

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபத்தின் வல்லமை.**

**தமது ஊழியக்காரனுடைய சுகத்தை விரும்புகிற கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக**

கர்த்தாவே, நீர் என் வழக்காளிகளோடே வழக்காடி, என்னோடு யுத்தம்பண்ணுகிறவர்களோடே யுத்தம்பண்ணும். நீர் கேடகத்தையும் பரிசையையும் பிடித்து, எனக்கு ஒத்தாசையாக எழுந்துநில்லும். என்னைத் துன்பப்படுத்துகிறவர்களோடு எதிர்த்துநின்று, ஈட்டியையோங்கி அவர்களை மறித்து: நான் உன் இரட்சிப்பு என்று என் ஆத்துமாவுக்குச் சொல்லும். என் பிராணனை வாங்கத்தேடுகிறவர்கள் வெட்கப்பட்டுக் கலங்குவார்களாக, எனக்குத் தீங்குசெய்ய நினைக்கிறவர்கள் நாணமடை வார்களாக. அவர்கள் காற்றுமுகத்தில் பறக்கும் பதரைப்போலாவார்களாக, கர்த்தருடைய தூாதன் அவர்களைத் துரத்துவானாக. அவர்களுடைய வழி இருளும் சறுக்கலுமாயிருப்பதாக, கர்த்தருடைய தூதன் அவர்களைப் பின் தொடருவானாக. முகாந்தரமில்லாமல் எனக்காகத் தங்கள் வலையைக் குழியில் ஒளித்து வைத்தார்கள், முகாந்தரமில் லாமல் என் ஆத்து மாவுக்குப் படுகுழி வெட்டினார்கள். அவன் நினையாத அழிவு அவனுக்கு வரவும், அவன் மறைவாய் வைத்தவலை அவ னையே பிடிக்கவுங்கடவது, அவனே அந்தக் குழியில் விழுந்து அழிவானாக. என் ஆத்துமா கர்த்தரில் களிகூர்ந்து, அவரு டைய இரட்சிப்பில் மகிழ்ந்திருக்கும். சிறுமைப்பட்டவனை அவனிலும் பலவானுடைய கைக்கும், சிறுமையும் எளிமையுமான வனைக் கொள்ளையிடுகிறவனுடைய கைக்கும் தப்புவிக்கிற உமக்கொப்பானவர் யார் கர்த்தாவே, என்று என் எலும்புகளெ ல்லாம் சொல்லும். கொடுமையான சாட்சிகள் எழும்பி, நான் அறியாததை என்னிடத்தில் கேட் கிறார்கள். நான் செய்த நன்மைக்குப் பதிலாகத் தீமைசெய்கிறார்கள், என் ஆத்துமா திக்கற்றுப்போகப் பார்க்கிறார்கள். அவர்கள் வியாதியாயிருந் தபோது இரட்டு என் உடுப்பாயிருந்தது, நான் உபவாசத்தால் என் ஆத்துமாவை உபத்திரப் படுத்தினேன், என் ஜெபமும் என் மடியிலே திரும்பவந்தது. நான் அவனை என் சிநேகிதனாகவும் சகோதரனாகவும் பாவித்து நடந்து கொண்டேன், தாய் க்காகத் துக்கிக்கிறவனைப்போல் துக்கவஸ்திரம் தரித்துத் தலைகவிழ்ந்து நடந்தேன். ஆனாலும் எனக்கு ஆபத்துண்டான போது அவர்கள் சந்தோ'ப்பட்டுக் கூட்டங்கூடினார்கள், நீசரும் நான் அறியாதவர் களும் எனக்கு விரோதமாய்க் கூட்டங் கூடி, ஓயாமல் என்னை நிந்தித்தார்கள். அப்பத்திற்காக இச்சகம்பேசுகிற பரியாசக் காரரோடே சேர்ந்துகொண்டு என்பேரில் பற்கடிக்கிறார்கள். ஆண்டவரே, எதுவரைக்கும் இதைப் பார்த்துக்கொண்டிருப் பீர்? என் ஆத்துமாவை அழிவுக்கும், எனக்கு அருமையானதைச் சிங்கக்குட்டிகளுக்கும் தப்புவியும். மகா சபையிலே உம் மைத் துதிப்பேன், திரளான ஜனங்களுக்கு ள்ளே உம்மைப் புகழுவேன். வீணாய் எனக்குச் சத்துருக்களானவர்கள் என் னிமித்தம் சந்தோ'யாமலும், முகாந்தரமில்லாமல் என்னைப் பகைக்கிறவர்கள் கண் சிமிட்டாமலும் இருப்பார் களாக. அவர்கள் சமாதானமாய்ப் பேசாமல், தேசத்தி லே அமைதலாயிருக்கிறவர்களுக்கு விரோதமாய் வஞ்சகமான காரியங் களைக் கருதுகிறார்கள். எனக்கு விரோதமாகத் தங் கள் வாயை விரிவாய்த் திறந்து, ஆ, ஆ, ஆ, ஆ எங்கள் கண் கண் டது என்கிறார்கள். கர்த்தாவே, நீர் இதைக் கண்டீர், மவுனமாயிராதேயும், ஆண்டவரே, எனக்குத் தூரமாகாதேயும். என் தேவனே, என் ஆண்டவரே, எனக்கு நியாயஞ்செய்யவும் என் வழக்கைத் தீர்க்கவும் விழித்துக்கொண்டு எழுந்தருளும். என் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நீதியின்படி என் னை நியாயம் விசாரியும், என்னைக்குறித்து அவர்களை மகிழவொட் டாதிரும். அவர்கள் தங்கள் இருதயத்திலே: ஆ, ஆ, இதுவே நாங்கள் விரும்பினது என்று சொல்லாதபடிக்கும், அவனை விழுங்கிவிட்டோம் என்று பேசாதபடிக்கும் செய்யும். எனக்கு நேரிட்ட ஆபத்துக்காகச் சந்தோ'க்கிறவர்கள் ஏகமாய் வெட்கி நாணி, எனக்கு விரோதமாய்ப் பெருமை பாராட்டு கிறவர்கள் வெட்கத்தாலும் இலச்சையாலும் மூடப்படக் கடவர்கள். என் நீதிவிளங்க விரும்புகிறவர்கள் கெம்பீரித்து மகிழ் ந்து, தமது ஊழியக்காரனுடைய சுகத்தை விரும்புகிற கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக என்று எப்போதும் சொல்லக்கட வர்கள். என் நாவு உமது நீதியையும், நாள்முழுதும் உமது துதியையும் சொல்லிக்கொண்டிருக்கும்.- **சங்கீதம் 35: 1-23**

**கர்த்தாவே, உமது கிருபை வானங்களில் விளங்குகிறது**

துன்மார்க்கனுடைய துரோகப்பேச்சு என் உள்ளத்திற்குத் தெரியும், அவன் கண்களுக்குமுன் தெய்வபயம்இல்லை. அவன், தன் அக்கிரமம் அருவருப்பானதென்று காணப்படுமளவும், தன் பார்வைக்கேற்றபடி தனக்குத்தானே இச்சகம் பேசுகிறான். அவன் வாயின் வார்த்தைகள் அக்கிரமமும் வஞ்சகமுமுள்ளது, புத்தியாய் நடந்துகொள்வதையும் நன்மை செய்வதையும் விட்டுவிட்டான். அவன் தன் படுக்கையின்மேல் அக்கிரமத்தை யோசித்து, நல்லதல்லாத வழியிலே நிலைத்து, பொல்லாப்பை வெறுக்காதிருக்கிறான். கர்த்தாவே, உமது கிருபை வானங்களில் விளங்குகிறது, உமது சத்தியம் மேகமண்டலங்கள் பரிய ந்தம் எட்டுகிறது. உமது நீதி மகத்தான பர்வதங்கள் போலவும், உமது நியாயங்கள் மகா ஆழமாகவும் இருக்கிறது, கர்த் தாவே, மனு'ரையும் மிருகங்களையும் காப்பாற்றுகிறீர். தேவனே, உம்முடைய கிருபை எவ்வளவு அருமையானது! ஆதி னால் மனுபுத்திரர் உமது செட்டைகளின் நிழலிலே வந்தடைகிறார்கள். உமது ஆலயத்திலுள்ள சம்பூரணத்தினால் திரு ப்தியடைவார்கள், உமது பேரின்ப நதியினால் அவர்கள் தாகத்தைத் தீர்க்கிறீர். ஜீவஊற்று உம்மிடத்தில் இருக்கிறது, உம்முடைய வெளிச்சத்திலே வெளிச்சம் காண்கிறோம். உம்மை அறிந்தவர்கள்மேல் உமது கிருபையையும், செம்மையான இருதயமுள்ளவர்கள்மேல் உமது நீதியையும் பாராட்டியருளும். பெருமைக்காரரின் கால் என்மேல்வராமலும், துன்மார்க் கருடைய கை என்னைப் பறக்கடியாமலும் இருப்பதாக. அதோ அக்கிரமக்காரர் விழுந்தார்கள், எழுந்திருக்கமாட்டாமல் தள்ளுண்டுபோனார்கள்.- **சங்கீதம் 36: 1- 12**

**கர்த்தாவே, என் ஜெபத்தைக்கேட்டு, என் கூப்பிடுதலுக்குச் செவிகொடும்**

என் நாவினால் பாவஞ்செய்யாதபடிக்கு நான் என் வழிகளைக் காத்து, துன்மார்க்கன் எனக்கு முன்பாக இருக்குமட்டும் என் வாயைக் கடிவாளத்தால் அடக்கிவைப்பேன் என்றேன். நான் மவுனமாகி, ஊமையனாயிருந்தேன், நலமானதையும் பேசாமல் அமர்ந்திருந்தேன், ஆனாலும் என் துக்கம் அதிகரித்தது, என் இருதயம் எனக்குள்ளே அனல்கொண்டது, நான் தியானிக்கையில் அக்கினி மூண்டது, அப்பொழுது என் நாவினால் விண்ணப்பம் செய்தேன். கர்த்தாவே, நான் எவ்வளவாய் நிலையற்றவன் என்று உணரும்படி என் முடிவையும், என் நாட்களின் அளவு இவ்வளவு என்பதையும் எனக்குத் தெரி வியும். இதோ, என் நாட்களை நாலு விரற்கடையளவாக்கினீர், என் ஆயுசு உமது பார்வைக்கு இல்லாததுபோலிருக்கிறது, எந்த மனு'னும் மாயையே என்பது நிச்சயம்.- **சங்கீதம் 39: 1-5**

தொடரும்...



# மரண அறிவித்தல்

அன்னை மடியில்
15 09 1954

ஆண்டவன் அடியில்
16 09 2020



## திருமதி சாவித்திரி இலக்குமணபிள்ளை

**யாழ். புங்குடுதீவு 10ம் வட்டாரம் கிழக்கு கண்ணகி அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு முகத்துவாரத்தை வதிவிடமாகவும், கனடா Scarborough வை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட சாவித்திரி இலக்குமணபிள்ளை அவர்கள் 16-09-2020 புதன்கிழமை அன்று சிவபதம் எய்தினார்.**

அன்னார், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை சரோஜினிதேவி தம்பதிகளின் அன்பு மூத்த மகளும், புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பூமணி தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற இலக்குமணபிள்ளை (மணி- M.M.P பிரபல வர்த்தகர், கொழும்பு) அவர்களின் அன்பு மனைவியும், கனடாவை சேர்ந்தவர்களான வினோத், கோபிநாத், ஷோபனா, ஸ்ரீநாத், சினேகா ஆகியோரின் பாசமிகு தாயாரும், தனுசியா, நிவேதிதா, குகதரன், அபினயா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பூங்கோதை(கனடா), காலஞ்சென்ற உதயகுமார்(சுவிஸ்), வாசுகி(சுவிஸ்), செந்தில்(சுவிஸ்), இளங்கோ(சுவிஸ்) ஆகியோரின் பிரியமிகு சகோதரியும், காலஞ்சென்ற தேவா(கனடா), சாந்தினி(சுவிஸ்), சந்திரகுமார்(சுவிஸ்), அருட்செல்வி(சுவிஸ்), கவிதா(சுவிஸ்), ராசமணி(கல்மடு- இலங்கை), யோகலக்ஷ்மி(ஜேர்மனி), சிரோன்மணி(சுவிஸ்), புஷ்பம்(ஜேர்மனி), செல்வன்(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், யாமிலன், யதுன், பிரஜின், அத்வின், ஆர்யன் ஆகியோரின் பிரியமிகு பேத்தியும் ஆவார்.

*அன்னாரின் பூதவுடல் செப்ரம்பர் 19ம் திகதி, 2020 அன்று சனிக்கிழமை மாலை 5.00 தொடக்கம் 9.00 மணிவரையும் மறுநாள் 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 தொடக்கம் மதியம் 8.30 வரையும் Chapel Ridge Funeral Home, located at 8911 Woodbine Avenue, Markham, Ontario, L3R 5G1 இல் பார்வைக்காக வைக்கப்பட்டு முற்பகல் 8.30 தொடக்கம் 9.15 மணி வரை அதே இடத்தில் கிரியைகள் நடைபெற்ற பின்னர் முற்பகல் 9.30 மணியளவில் Highland Hills Crematorium, 12492, Woodbine Avenue Gormley, Ontario, L0H 1GO என்னும் இடத்தில் தகனம் செய்யப்படும்.*

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வினோத் - மகன்: 647 830 4674
கோபிநாத் - மகன்: 647 922 6429
ஸ்ரீநாத் - மகன்: 647 262 6363
குகன் - மருமகன்: 647 707 9418

Life Insurance
Don't think twice
Life Insurance
Critical Illness
Disability
Investments
Group Benefits
RRSP / RESP
iNFORCE LIFe Financial Services Inc.
RESP Registered Education Saving Plans
40% - 20% Goverment Grant
Plus additional 15-10% on us.
Start Saving Early
Ajanthan (Ajay) Thavayogarajah
Insurance and Investments
Call Ajay: 416.704.8074

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

வீடு வாங்க விற்க
Vijay Muthumani
Sales Representative
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated.
Off: 416-298-3200
Dir 647-963-0705

23rd Years in Publishing
UTHAYAN உதயன்
Tel : 416-752-1524
Fax: 416-752-6703

NEW CLASS STARTING
புதிய வகுப்புகள் ஆரம்பம்
October 2020
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services

ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
PARK PLAZA
1646 VICTORIA PARK AVE., SUITE 1 (BETWEEN LAWRENCE & EGLINTON) TORONTO, ON. M1R 1P7
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Email: OATC@oceantax.ca Web: www.oceantax.ca
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

மொன்றியல் நகரில்
உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்தநின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயம் 1276 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 18, 2020

# கனடிய தமிழர் வர்த்தக சம்மேளத்தின் தற்போதைய தலைவர் மற்றும் நிறைவேற்று உபுதலைவர் மீண்டும் தேர்தலில் போட்டியிட அனுமதி கிட்டியது

## Canadian Tamil Chamber of Commerce Permits the Current President and Current Executive Vice-President to Contest in the Upcoming Election







கனடாவில் 25 வருடங்களுக்கு மேல் சேவை நோக்கத்தோடு இயங்கிவருகின்ற, கனடிய தமிழர் வர்த்தக சம்மேளத்தின் தற்போதைய தலைவர் திரு சாந்தலிங்கம் பஞ்சலிங்கம் (சாந்தா) மற்றும் நிறைவேற்று உபுதலைவர் திரு தீபன் ராஜ் ஆகியோர் எதிர்வரும் தேர்தலில் மீண்டும் தேர்தலில் போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்டார் மீண்டும் தத்தமது பதவியில் அமர்ந்து சேவையாற்ற அனு-மதி கிட்டியுள்ளது.

மேற்படி கனடிய தமிழர் வர்த்தக சம்மேளத்தின் விசேட பொதுக்கூட்டம் ஒன்று கடந்த திங்கட்கிழமையன்று ஸ்காபுறோ ஜேசிஎஸ் மண்டபத்தில் நடைபெற்றது.

அந்த கூட்டத்தில் தற்போதைய தலைவர் திரு சாந்தலிங்கம் பஞ்சலிங்கம் (சாந்தா) மற்றும் நிறைவேற்று உபுதலைவர் திரு தீபன் ராஜ் ஆகிய இருவரும் தற்போது வகிக்கும் பதவிகளில் தொடர்ந்து தங்கள் பணிகளை மேலும் சிறப்பாக ஆற்றி சம்மேளனத்திற்கு மேலும் நற்பெயரை பெற்றுத் தருவார்கதள் என்று பெரும்பான்மையான அங்கத்தவர்கள் விரும்பியதன் பேரில் இந்த விசேட பொதுக் கூட்டம் நடத்தப்பெற்றந்து.


மேலும் தற்போதைய தலைவர் திரு சாந்தலிங்கம் பஞ்சலிங்கம் (சாந்தா) அவர்களுடைய தற்போதைய பணிக்காலத்திலேயே ஏனைய உறுப்பினர்களின் ஆதரவோடு சம்மேளத்திற்கு சொந்தமாக ஒரு கட்டடம் கொள்வனவு செய்யப்பெற்றது. மேற்படி கட்டடக் கொள்வனவு மற்றும் அது சார்ந்த பணிகள் இன்னும் நிறைவு செய்ய வேண்டியிருப்ப்தாலும் அவற்றை நிறைவேற்றுவதற்காக கடந்த திங்கட்கிழமையன்று நடைபெற்ற விசேட கூட்டத்தில் விசேட தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு சமூகமளித்த 100 வீதுமான அங்கத்தவர்களும் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தார்கள்.

மேலும் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளத்தின் தற்போதைய தலைவர் திரு சாந்தலிங்கம் பஞ்சலிங்கம் மற்றும் நிறைவேற்று உபுதலைவர் திரு தீபன் ராஜ் ஆகிய இருவரும் தற்போது தங்கள் பதவிகளில் இருந்து பல நற்பணிகளை ஆற்றிவருகின்றனர் ஆனால் அவர்கள் ஏற்கெனவே இரண்டு பதவிக் காலங்களில் அமர்ந்துள்ளதால் இனிமேல் அவர்கள் இருவருக்கும் அடுத்த தேர்தலில் போட்டியிடும் தகைமை இல்லாமல் போய்விடும். ஆனால் அவர்களது சேவையும் பங்களிப்பும் தொடர்ந்து கனடிய தமிழர் வர்த்தக சம்மேளத்திற்கு தேவை என்ற காரணத்தினாலேயே இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் இயக்குனர் சபைத் தேர்தலில் ஏனைய போட்டியாளர்களோடு இவர்கள் இருவரும் களத்தில் நிற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனாலும் தற்போது உள்ள கனடிய தமிழர் வர்த்தக சம்மேளத்தின் யாப்பில் எவ்வித மாற்றமும் செய்யாமல் இந்த இருவருக்குமான விசேட அனுமதியை-யை சம்மேளத்தின் பொதுச்சபை அமோக ஆதரவுடன் இந்தச் சலுகையை வழங்கியுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இங்கு காணப்படும் படங்கள் அன்றைய விசேட கூட்டத்தின் பின்னர் எடுக்கப்பட்டவையாகும்.

# அமெரிக்க தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக உயர் கல்வி சார்ந்த தகவல்களை வழங்க ஏழு அமெரிக்க பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் கலந்து கொள்ளும் இணைய வழி கலந்துரையாடல்




அமெரிக்கா, நியூ ஜெர்சி மாகாணத்தில் அமைந்துள்ள கல்வி, கண்டுபிடிப்பு, மாணவ தலைமைத்துவம், சமூக சேவை அமைப்பு நிறுவனம் புலம்பெயர் வாழ் தமிழ் மாணவர்கள், பெற்றோர்கள், கலைஞர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், கணணித் தொழில்நுட்ப வல்லுனர்கள் போன்ற பல்வேறு துறை வல்லுநர்கள், அறிஞர்களின் திறன்கள், அறிவாற்றல்களை அவ்வப்போது கண்டறிந்து அவற்றை பல்வேறு ஊடகங்களினூடாக புலம்பெயர் வாழ் சமூகத்துடன் பகிர்ந்து கொள்வதன் மூலம் எமது இரண்டாம் தலை முறையினரை கல்வி, கண்டுபிடிப்பு, சமூகசேவை, மாணவ தலைமைத்துவ துறை-களில் வல்லமை உடைய ஓர் சமூகமாக வளர்த்தெடுக்க முடியும் என்ற நம்பிக்கையில் பல்வேறுபட்ட கல்வி, சமூக, மொழி, கலாச்சார முன்னேற்ற திட்டங்களை முன்னெடுத்து வருகிறார்கள்.

இதன் ஓர் அம்சமாக, எதிர்வரும் ஞாயிறு 20ம் திகதி அமெரிக்கா வாழ் பல்கலைக்கழக பேராசிரியர்கள் ஏழு பேர் ஒன்றிணைந்து "புலம்பெயர் வாழ் தமிழ் மாணவர்களின் உயர்கல்வி அபிவிருத்தி" என்ற தலைப்பில் மாணவர்கள், பெற்றோர்களுக்கு பலனளிக்கும் வகையில் ஓர் கல்விதகவல் பரிமாற்ற கலந்துரையாடலை கனடாவின் ஈழத்தாய் தொலைக்காட்சி நிறுவனத்தின் அனுசரணையுடன் ZOOM ஊடாக நிகழ்த்தவுள்ளார்கள்.

நியூ ஜெர்சி பல்கலைக்கழக பேராசிரியர் திரு ஞானசேகரன் செல்லையா அவர்களின் முயற்சியின் பலனாக முன்னெடுக்கப்படும் இக்கல்விக் கருத்தரங்க நிகழ்வில் பல்வேறுபட்டகல்வித் துறைகளில் முன்னிலையில் உள்ள ஏழுஅமெரிக்க பல்கலைக்கழக தமிழ்ப் பேராசிரியர்கள் ஒன்றிணைந்துதமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக உயர் கல்வி சம்மந்தமான பலனுள்ள தகவல்களை வழங்கவுள்ளார்கள்.குறிப்பாக அமெரிக்கா மற்றும் கனடாவிலுள்ள அதி சிறந்த பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி கிடைக்க எமது தமிழ் மாணவர்களை தயார்ப்படுத்துவது, பல்கலைக்கழகங்களுக்கான புகுமுகத்தேர்வுக்கு தயார்படுத்தல், உயர்கல்விப் புலமைப்பரிசில்களை பெற்றுக்கொள்ளல், மாணவத்தலைமைத்துவ ஆற்றல்களை வளர்த்துக்கொள்ளல், இணையவளிக் கல்வி போன்ற மேலும் பல பலனுள்ள தகவல்களை வழங்கவுள்ளார்கள்.

இக்கலந்துரையாடல் நிகழ்வுக்கு கனடா உதயன் பத்திரிகை பிரதம ஆசிரியர் திரு. நாகமணி லோகேந்திரலிங்கம் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். புலம்பெயர் வாழ் இரண்டாம் தலைமுறையியினரை கல்வி, தொழில்நுட்பம், கண்டுபிடுப்பு, மாணவ தலைமைத்துவம், சமூகசேவைதுறைகளில் அதீத ஆற்றல், திறன் உடையவர்களாக வளர்த்தெடுப்பதன் மூலம் ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்துக்கு உலக அரங்கில் பெருமை சேர்க்க முடியுமென நம்புகிறோம்.

இக்கலந்துரையாடல் நிகழ்வை பெற்றோர்கள், மாணவர்கள் கனடாவைத் தளமாகக் கொண்ட ஈழத்தாய் தொலைக்காட்சி நிறுவனத்தின் நேரடி ஒலிபரப்பினூடாக பார்வையிடலாம். www.eettv.com என்ற வலையொளித்தளத்தில்சென்று WATCH LIVE என்ற தொடரை அழுத்தி பார்வையிடலாம்.

தகவல்
ஞானசேகரன் செல்லையா
நியூ ஜெர்சி பல்கலைக்கழக பேராசிரியர்
அமெரிக்கா.